23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும்
(Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



FREE
Real Estate
Classes start
every week
Call:416.321.6969



நதி 23 பாலம் 22 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 15, 2013


# கனடிய மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம்

கடந்த ஏழு வருடங்களாக துண்டு விழும் வரவு செலவுத்திட்டத்தை தயாரித்து வந்த கனடிய மத்திய அரசு முதன்முறையாக மேலதிக வரவை காட்டும் வரவு செலவுத்திட்டத்தை 2015 - 2016 ஆம் நிதி ஆண்டில் சமர்ப்பிக்கும் என கனடிய மத்திய அரசின் நிதி மந்திரி Jim Flaherty நவம்பர் 12, 2013 இல் எட்மென்ரன் வர்த்தக சம்மேளனத்தின் கூட்டத்தில் தெரிவித்தார்.



கடந்த 2009 - 2010 ஆம் நிதி ஆண்டில் அதி கூடிய துண்டு விழும் தொகையான $55.6 பில்லியனை தனது வரவு செலவுத் திட்டத்தில் கொண்டிருந்த கனடிய மத்திய அரசு இதை படிப்படியாக குறைத்து 2013 - 2014 ஆம் நிதி ஆண்டில் $17.9 பில்லியன் துண்டு விழும் தொகையாக கொண்டு வந்தது. நிதி அமைச்சர் தனது 2014 - 2015 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மிகவும் குறைந்த துண்டுவிழும் தொகையாக $5.5 பில்லியனைக் கொண்டிருக்கும் என்றார். அதன் பின்னர் 2015 - 2016 ஆம் நிதி ஆண்டின் வரவு செலவுத்திட்டம் மேலதிக வரவாக $3.7 பில்லியனைக் கொண்டிருக் கும் என திடமாக தான் நம்புவதாக அமைச்சர் கூறினார். இதைத்தொடர்ந்து வரும் நிதி ஆண்டுகள் எல்லாம் மேலதிக வரவையே வரவு செலவுத்திட்டத்தில் கொண்டிருக்கும்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், எமது அரசாங்கம் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு இடையிலேயே, மேலதிக வரவை காட்டும் வரவு செலவுத்திட்டத்தை எந்தவித வரி அதிகரிப்பையும் மக்கள் மீது சுமத்தாமலும், மிக முக்கியமாக சுகாதார சேவைகள் மற்றும் சமூக சேவைகளுக்கான உதவித் தொகைகளை குறைக்காமலும் கொண்டு வருவோம் என உறுதியளித் திருந்தது. அதை 2015 - 2016 ஆம் நிதி ஆண்டில் எம்மால் செயற்படுத்த முடியும் என உறுதியாக நம்புவதாக கூறினார். இந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து பேசிய சிம்மாசன பிரசங்கத்தில் கூறியபடி அரச திணைக்களங்களின் நிர்வாக செலவின அதிகரிப்பை மார்ச் 2014 இல் இருந்து தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மாறாமல் (உறை நிலையில்) வைத்திருப்பதால் மட்டுமே 2014 - 2015 ஆம் நிதி ஆண்டில் $0.5 பில்லியனையும் 2015 - 2016 ஆம் நிதி ஆண்டில் $1.1 பில்லியனையும் சேமிக்க முடியும். அரசுகளுக்கு சொந்தமான சில அசையா சொத்துக்களை (Assets) விற்பதன் மூலமும் 2014 - 2015 ஆம் நிதி ஆண்டில் $0.5 பில்லியனையும் 2015 - 2016 ஆம் நிதி ஆண்டில் $1.5 பில்லியனையும் வருவாயாக பெறமுடியும்.

கனடாவின் பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் 1.7 வீதமாகவும், அடுத்த வருடம் 2.4 வீதமாகவும் 2015 இல் 2.6 வீதமாகவும் இருக்கும் என பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

நிதி அமைச்சரின் இந்த பொருளாதாரம் சம்பந்தப்பட்ட அறிக்கையை விமர்சித்த புதிய ஜனநாயகக்கட்சியை சேர்த்த நிதி விவகாரம் பற்றிய விமர்சனையாளரான Peggy Nash இந்த அறிக்கை பொருளாதாரம் சம்பந்தப்பட்ட அறிக்கை அல்ல, இது 2015 இல் நடைபெற இருக்கும் தேர்தலுக்கான அரசியல் சம்பந்தப்பட்ட அறிக்கை என்றார்.




## றொறன்ரோ மாநகர- சபை உறுப்பினர்கள் vs. நகரமுதல்வர்

றொறன்ரோ மாநகரசபை உறுப்பினர் Denzil Minnan - Wong இனால் சம்பிரதாயமாக (சட்டவலு அற்ற) கொண்டு வரப்பட்ட பிரேரணையான "நகரமுதல்வர் தற்காலிகவிடுப்பில் செல்வதுடன் தனது கொக்கெயின் போதைப்பொருள் பாவித்தது தொடர்பாக தெரிவித்த தவறான தகவல்களுக்கு மாநகரசபையிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்பது 37 இற்கு 5 என்ற வாக்கு வித்தியாசத்தால் நவம்பர் 13, 2013 இல் றொறன்ரோ மாநகரசபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. Karen Stintz உட்பட 3 உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை.

நவம்பர் 13, 2013 இல் வெளியான நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்களின்படி நகரமுதல்வரின் முன்னாள் அலுவலக ஊழியர்கள் பின்வரும் விடயங்களை கூறியிருந்தனர். இவ் விடயங்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படாத படியால் முன்னர் ஊடகங்கள் இவற்றை வெளியிடுமாறு வழக்குத்தாக்கல் செய்த போது அவை கறுப்பு மை பூசப்பட்டே ஒக்ரோபர் 30, 2013 இல் வெளியிடப்பட்டன. பின்னர் ஊடகங்கள் மேன்முறையீடு செய்தபோது இவை ஒன்ராறியோவின் உயர்நீதிமன்ற நீதிபதி Ian Nordheimer


தொடர்ச்சி 02ஆம் பக்கம்






MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
- Residential/Commercial needs
- Purchase/Refinancing/Renewal/Switch
- Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
- Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
kjegasothy@markville.com | 416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100



துரித பணமாற்றுச் சேவை
- 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை




மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221



இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# கனடிய.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இனால் நவம்பர் 13, 2013 இல் முழுவதுமாக வெளியிடப்பட்டன. எவ்வாறாயினும் இக்குற்றச்சாட்டுக்கள் ஒன்ராறியோ மாநகர-சபை முன்னாள் ஊழியர்களின் வாக்கு மூலம் மட்டுமே. நீதிமன்றத்தில் நிரூபிக்கப் படாத குற்றச்சாட்டுக்கள் என்ற அறிவித்தல் களுடன் தற்போது ஊடகங்களில் இவை வெளியிடப்பட்டுள்ளன.

களால் Taxi ஓட்டுனரை பேசி உள்ளார்.

- சென். பற்றிக்ஸ் நாளில் (2012) றொப் ஃபோட் கொக்கெயின் போதையில் உணவு விடுதிக்கு வந்ததாக அவ் உணவு விடுதி ஊழியர் ஒருவர் கூறியுள்ளார்.
- ஒருநாள் இரவு 9 மணி அளவில் (ஒக்ரோபர் 2012) மாநகரசபை ஊழியர் ஒருவர் றொப் ஃபோர்ட்டின் வீட்டிற்கு கணினி திருத்த சென்றபோது அங்கு றொப் ஃபோர்ட் மர்ஜுவானா புகைத்துக்கொண்டு இருந்ததாகவும் அதை அவருக்கும் புகைக்க கொடுத்ததாகவும், அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் கூறியுள்ளார்.



- றொப் ஃபோர்ட் Oxycontin மருந்து (Prescriped painkiler) பாவிப்பவர்.
- சென். பற்றிக்ஸ் நாளில் (2012) போதையுடன் இருந்த பெண் துணையாளர் (Escort) ஒருவருடன் காணப்பட்டார்.
- சென். பற்றிக்ஸ் நாளில் (2012) மாநகர-சபை உறுப்பினர் ஒருவருடன் கைகலப்பில் ஈடுபட்டார்.
- றொப் ஃபோர்ட் இனவெறி வார்த்தை
- மாநகரசபை ஊழியர் ஒருவர் றொப் ஃபோர்ட்டின் அலுவலகத்தில் அவரது மேசையின் Drawer இனுள் மர்ஜுவானாவை கண்டதாக கூறியுள்ளார்.
- றொப் ஃபோர்ட் மாநகரசபை ஊழியர்களை தனது வீட்டு வேலைகளான எரிந்து போன மின்குமிழை மாற்றுதல், பிள்ளைகளின்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்







விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com www.tamilvanakkam.com*




# கனடிய வரலாற்றில் இனவாரி நடவடிக்கை

## இனவாரி நடவடிக்கை என்றால் என்ன?

இனத்துவம், முதற்குடிமை, தோற்றுவாய், பரவணி, மதம், தரப்புச் சார்ந்த படிவார்ப்புகள் போன்றவற்றுள் ஏதோ ஒன்றின் அடிப்படையில் அரசாங்கம் மக்களைக் கண்காணித்து, கட்டுப்படுத்தும் நடவடிக்கையே இனவாரி நடவடிக்கை எனப்படும். இது ஒரு விரும்பத்தகாத புலனாய்வு உத்தி ஆகும். இதற்கு இலக்காகும் மக்களுக்கு மாத்திரமன்றி, கண்காணிப்புத் துறையும் மற்றும் காவல்துறையும் மேற்கொள்ளும் புலனாய்வுகளுக்கும் கூட இதனால் பேரழிவு விளைகிறது. நடத்தையை அல்லது செயலை விடுத்து இன அல்லது இனத்துவ அடையாளத்துக்கு இலக்குவைத்து அரசாங்கம் மக்களைக் கண்காணித்து, கட்டுப்படுத்தும்பொழுது, மனித உரிமைகளுக்கும், மக்களாட்சிக்கும், மக்களின் சுதந்திரத்துக்கும் பேராபத்து நேர்கிறது.

ஆனால் அப்படிக் கனடாவில் நடக்கவில்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தவரை இனவாரி நடவடிக்கை ஒரு புதிய சங்கதி அல்ல. இங்கிலாந்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் தாம் கைதுசெய்யும் ஆட்களின் இன, மத, குழுமப் புள்ளிவிபரங்களைக் குறித்து வைத்திருக்கிறார்கள். கனடாவ-ில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் எமது அதிகாரிகள் அத்தகைய புள்ளிவிபரங்களை வைத்திருக்க வேண்டியதில்லை. ஆதலால் கனடாவில் எவ்வளவு தூரம் விபரம் திரட்டப்படுகிறது என்பதைக் கணிப்பது கடினம். எனினும், கனடாவில் இனவாரி நடவடிக்கை விரவிப் பரவியுள்ளது என்பதே ஆய்வுகள் பலவும் கூறும் முடிபு:

• ரொறன்ரோ மாநகரத்தைச் சேர்ந்த 3,400 இடைநிலைப் பள்ளி மாணவர்களை ஆய்விட்டுக் கண்டறியப்பட்ட உண்மை என்னவெனில், கடந்த ஈராண்டுகளில் குற்றச் செயல் எதிலும் ஈடுபடாதிருந்தும் கூட, இரு தடவைகள் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் காவல் துறையினரால் நிறுத்தப்பட்டவர்களுள் கறுப்பின மாணவர்கள் 34 விழுக்காட்டினர் என்பதே. அவ்வாறு நிறுத்தப்பட்டோருள் வெள்ளையின மாணவர்கள் 4 விழுக்காட்டினர் மாத்திரமே.

• 1994ல் ஒன்ராறியோ ஒட்டுமொத்த இனவாத ஒழிப்பு ஆணையம் (Ontario Systemic Racism Commission) மேற்கொண்ட ஆய்வும் அத்தகைய பெறுபேறுகளையே முன்வைத்தது: அதற்கு முந்திய ஈராண்டுகளில் காவல்துறையினரால் ஒரு தடவைக்கு மேற்பட நிறுத்தப்பட்ட ரொறன்ரோ வாசிகளுள் 17 விழுக்காட்டினர் கறுப்பினத்தவர்கள். 8 விழுக்காட்டினர் மாத்திரமே வெள்ளையின ரொறன்ரோ வாசிகள். கறுப்பின ஆண்கள் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள்: அதற்கு முந்திய ஈராண்டுகளில் காவல்துறையினரால் நிறுத்தப்பட்ட ரொறன்ரோ வாசிகளுள் 43 விழுக்காட்டினர் கறுப்பின ஆண்கள். 25 விழுக்காட்டினர் மாத்திரமே வெள்ளையின ஆண்கள்.

• கனடாவில் இடம்பெறும் இனவாரி நடவடிக்கையை உள்ளூர், உள்நாட்டு, உலக அமைப்புகள் கண்டறிந்து, கண்டித்துள்ளன. 2006ல் குடிவரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய மக்கள் ஆணையம் (People's Commission on Immigration Security Measures), இனவாரி நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களும், சட்ட நிபுணர்களும், புலமையாளர்களும் முன்வைத்த படுமோசமான விளைவுகளைச் செவிமடுத்த பின்னர், இனவாரி நடவடிக்கை ஒழிக்கப்பட வேண்டும் என்று விதந்துரைத்தது. 2007ல் ஐ.நா. இனவாரி ஓரவஞ்ச ஒழிப்புக் குழுவும் (UN Committee on the Elimination of Racial Discrimination) அதனையே விதந்துரைத்தது.

9/11 நிகழ்வின் பின்னர் கனடாவில் அரபு, தென்னாசிய, ஆபிரிக்க, முஸ்லீம் சமூகங்கள் குறித்து இனவாரி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதற்கு என்ன சான்று?

• இனவாரி நடவடிக்கையால் தாக்கத்துக்கு உள்ளாகாத வெள்ளையின மக்கள் இனவாரி நடவடிக்கை இடம்பெறுவதை மறுக்கக்கூடும். எனினும் தமது அடையாளத்தினாலேயே ஓரவஞ்சத்துக்கு இலக்காகும் ஆபத்து உண்டு என்பது அத்தகைய இனவாரி நடவடிக்கைக்கு இலக்காகும் சமூகங்களுக்கு நன்கு தெரியும். இனவாரி நடவடிக்கையால் முழுச் சமூகமே அஞ்சி வாழ நேர்கிறது.



• 2001ல் லிபன் உசேன் (Liban Hussein) என்னும் கனடியவாசி கனடாவின் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டார். அவர் எதுவித தவறும் புரியவில்லை என்று பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே தனது தொழிலையும் வீட்டையும் மானத்தையும் அவர் இழக்க நேர்ந்தது.

• 2002ல் அமெரிக்க - இஸ்லாமிய உறவு மன்றம் - கனடா (The Council on American-Islamic Relations, Canada or CAIR-CAN) கனடிய முஸ்லீங்கள் பற்றி மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம், அதில் பங்குபற்றியோரிடையே ஐவருள் ஒருவர் அதற்கு முந்திய ஆண்டில் இனவாரி நடவடிக்கைக்கு இலக்காகியமை தெரிய வந்தது.

• 2004ல், நாடு முழுவதும் 467 முஸ்லீங்களுக்கு நேர்ந்த அனுபவங்களை CAIR-CAN ஆய்விட்டது. ஆய்வுக்கு உள்ளானவர்களுள் 8 விழுக்காட்டினரை கனடிய பாதுகாப்பு உளவுச் சேவை (CSIS) அல்லது கனடிய நாட்டுக் காவல்துறை (RCMP) அல்லது உள்ளூர் காவல்துறை அதிகாரிகள் ஒரு தடவையாவது சந்தித்து உரையாடியது தெரிய வந்தது. அத்தகைய அனுபவத்துக்கு உள்ளாகிய யாரோ ஒருவரை, இந்த ஆய்வில் பங்குபற்றியோருள் 43 விழுக்காட்டினர் அறிந்திருந்தார்கள். எனவே உண்மையான எண்ணிக்கை மேலும் அதிகமாகலாம். 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட அரபு முஸ்லீங்கள் மீதே பாதுகாப்புத் துறையினர் பெரிதும் இலக்கு வைத்தனர். ஆய்வுக்கு உள்ளான ஏறத்தாழ 20 ஐரோப்பிய-கனடியருள் எவரையுமே தாம் சந்திக்க வேண்டும் என்று பாதுகாப்புத் துறையினர் கேட்டதில்லை.

• 2004-ல் CAIR-CAN மேற்கொண்ட ஆய்வில் CSIS-ன் சந்திப்பு உத்திகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட உத்திகளைப் போலவே CSIS-ன் சந்திப்பு உத்திகளும் உள்ளத்தை உலுக்குபவை. வேலைத்தலங்களுக்குச் சென்று ஆட்களைச் சந்தித்தல், ஒரு சட்டவாளருடன் கதைக்கும் எண்ணத்திலிருந்து அவர்களைப் பின்வாங்கச் செய்தல், மிகவும் தீவிரமாய் விசாரித்தல் என்பன அவற்றுள் அடங்கும். ஆய்வில் பங்கு பற்றியோருள் 46 விழுக்காட்டினர் அச்சத்துக்கும், 24 விழுக்காட்டினர் ஓரவஞ்சத்துக்கும், 5 விழுக்காட்டினர் அத்தகைய சந்திப்பை

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- *Detailing*
- *Motor Shampoo*
- *Interior Shampoo*
- *Exterior Wash*
- *Waxing*
- *Repairs*
- *Safety Certification*
- *Overall Maintenance*
- *Under Coating*
- *Rust Proofing*

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# ஞானம் அடைவது கஷ்டமா?

## சத்குருவுடன் சேகர் கபூர்

நான் யார் தன்னை உணர்வது ஏன் கஷ்டமான விடயமாக இருக்கிறது. இந்தக் கேள்விகள் பலருக்கும் புதிராகவே இருந்து மறைந்து போய் விடுகிறது. இங்கே பாலிவூட் இயக்குனர் சேகர் கபூர் தனக்குள் எழுந்த இக்கேள்விகளை சத்குருவிடம் கேட்க சத்குருவின் பதில்

**சேகர்** - நான் யார்? (சத்குரு சிரிக்கிறார்)

**சத்குரு** - நல்லவேளை என்னிடம் கேட்கிறீர்கள். எனவே பிரச்சினை இல்லை. நீங்கள் வெளியில் யாராவது ஒருவரிடம் போய் நான் யார் என்று கேட்டால் அவர்கள் உங்களை மனநோய் மருத்துவ மனைக்கு கொண்டு செல்வார்கள். (சிரிக்கிறார்)

**சேகர்** - சரி! என்னையே நான் கேட்கிறேன். நான் யார்?

**சத்குரு** - மனிதன் தன்னுடைய இயல்பு என்ன என்று தெரியாமலேயே வாழ முயற்சிக்கிறான். தன்னுடைய உயிர் தன்மை பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளாமலேயே வாழ்ந்து போக முயற்சிக்கிறான். இப்படி வாழும் போது அந்த வாழ்க்கை தற்செயலான வாழ்வாகவே மட்டும் இருக்கும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

ஒருவர் இப்படி தன் முழுவாழ்க்கையையும் தற்செயலாக வாழும்போது அவரிடத்தில் பயம், கவலை, போராட்டம் ஆகியவை நிச்சயமாக இருக்கும் இல்லையா? ஆனால் வாழ்க்கையை போராட்டங்கள் இல்லாமலே வாழ முடியும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் கண் தெரியாதவராக இருந்தால் சில அடி தூரம் நடப்பது கூடப் போராட்டம் தான். வாழ்க்கை ஏன் உங்களுக்கு ஒரு போராட்டமாக ஆகி விட்டது என்றால் எது நான், எது உலகம், எது என்னுடைய தன்மை என்று ஒரு தெளிவான புரிதல் உங்களிடம் இல்லை. உங்கள் புரிதலை உயர்த்திக் கொண்டால் உங்கள் தன்மையை உங்கள் இயல்பை உங்களால் உணர முடியும்.

**சேகர்** - எனவே ஞானம் பெற வேண்டுமானால் நான் மிகவும் கஷ்டப்பட்டாக வேண்டுமா? ஏன் இது இவ்வளவு கடினமாக உள்ளது.

**சத்குரு -** நீங்கள் உங்களை உணர்வதற்கு நீங்கள் நீங்களாக மாறுவதற்கு ஏன் கஷ்டப்பட வேண்டும். (சிரிக்கிறார்) நீங்கள் வேறு ஏதாவதாக ஆக வேண்டுமென்றால் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும். நீங்களாகவே இருப்பதற்கு எதற்காக கஷ்டப்பட வேண்டும். ஞானம் அடைவது என்பது ஒரு சாதானை இல்லை. அது ஒருவர் தன்னை உள்ளது உள்ளபடி உணர்வது மட்டுமே. நீங்கள் எதையும் கண்டு பிடிக்கவில்லை. உருவாக்கவில்லை. ஏற்கனவே உள்ள ஒன்றை அப்படியே உணர்கிறீர்கள்.



ஏன் கடினமாக இருக்கிறது என்றால் நீங்கள் வேறு திசையில் தேடுகிறீர்கள். அவ்வளவு தான். வாழ்க்கை பற்றி உங்கள் ஐம்புலன்கள் மூலம் மட்டுமே புரிந்து கொள்கிறீர்கள். பார்ப்பது, கேட்பது, நுகர்வது, ருசிப்பது, தொடுவது என்று புலன்களின் இயற்கையான தன்மையே வெளிநோக்கி செயல்படுவது தான். ஏனெனில் அவைகள் பிழைப்பிற்காக மட்டுமே உருவாக்கப்பட்டவை. உங்களைச் சுற்றி என்ன இருக்கிறது என்று உங்களால் பார்க்க முடியும். ஆனால் உங்களால் உங்கள் கருவிழிகளை திருப்பி உங்கள் உள்ளே பார்க்க முடியாது.

இப்போது இந்த சத்தத்தை (கை தட்டுகிறார்) உங்களால் கேட்க முடிகிறது. சிறிய ஒரு எறும்பு இந்தக் கையின் மேல் ஊர்ந்து சென்றாலும் உங்களால் உணர முடியும். ஆனால் இத்தனை இரத்தம் உடலுக்குள் ஓடுகிறதே. அதை உங்களால் உணர முடிகிறதா?.

**சேகர்** - இல்லை

சத்குரு - இயற்கையிலேயே உங்களுடைய உணரும் தன்மை வெளிநோக்கியே உள்ளது. இப்போது நீங்கள் என்னை பார்க்கிறீர்கள். ஆனால் இந்த அனுபவத்திற்கான அடிப்படை வெளியில் நடக்கவில்லை. உங்கள் உள்ளே தான் நடக்கிறது. வெளிச்சம் என்மீது விழுந்து எதிரொலித்து உங்கள் விழி லென்சின் வழியாக சென்று கண்ரெட்டினாவில் தலை கீழான விம்பம் தோன்றி பிறகுதான் என்னை பார்க்க முடிகிறது.

அந்த முழு அனுபவமும் உங்கள் உள்ளேயே தான் நடக்கிறது. இல்லையா? இப்படி உங்கள் அனைத்து வெளி அனுபவங்களுக்கான அடிப்படையும் உங்கள் உள்ளேயும் நடக்கிறது. அப்படித்தானே.



சத்குரு வாசுதேவ்

**சேகர்** - ஆம்.

சத்குரு - இப்படி உள் நிலையும் நடக்கும் உலகம் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொருமாதிரியாக வெளிப்படுகிறது. உங்களுக்கு வெளிப்படுவது போல பறவைகளுக்கோ, பறவைகளுக்கு வெளிப்படுவது போல மிருகங்களுக்கோ வெளிப்படுவதில்லை.

உங்களுக்கு தெரியுமா நாய்கள் எல்லா நிறங்களையும் கறுப்பு, வெள்ளையாகவே பார்க்க முடியும். இப்போது நரம்பியல் மருத்துவர்கள் கூட சொல்கிறார்கள் நீங்கள் என்னை பார்க்க முடிகிறது என்றால் அதற்கு நம் மூளையின் சுமார் பத்துக்கு மேற்பட்ட பகுதிகளை பயன்படுத்துகிறோம் என்று. ஒரு பகுதி சரியாக வேலை செய்யவில்லை என்றால் உங்களுக்கு நிறம் தெரியாது. இன்னொரு பகுதி சரியாக வேலை செய்யவில்லை என்றால் நீங்கள் பார்க்கும் விம்பம் தெளிவாக இருக்காது. எனவே உங்கள் அனுபவம் என்பது புலன் உறுப்புக்கள் மூலமாக உங்கள் உள்நிலை யில் நிகழ்பவை தான். அதனால் தான் இந்தக் கலாசாரத்தில் எப்போதும் யாருக்காவது எந்த அனுபவமாவது நடந்தால் இது உங்கள் கர்மா என்று சொல்கிறோம். கர்மா என்றால் செயல். அதாவது உங்கள் செயல்களின் விளைவு என்கிறோம்.

அனுபவங்கள் வெளியில் நிகழ்ந்தாலும் அதற்கான செயல் உள்ளே தான் நடந்திருக் கிறது. எனவே உங்கள் வாழ்க்கை அனுபவங்கள் முழுவதுமே 100 சதவீதம் உங்கள் செயல்களின் விளைவு தான்.

உங்கள் செயல்கள் மட்டுமே வேறு ஒருவருடைய செயல்கள் அல்ல. எனவே நீங்கள் யார் என்பது உங்களுக்குள்ளே இருக்கிறது. ஆனால் நீங்கள் புரிந்து கொள்வது எப்போதும் வெளிநோக்கியே இருக்கிறது.




**_4 day Inner Engineering program led by_**
**_Isha teacher trained by Sadhguru_**

| | | |
|---|---|---|
| **_TIMINGS:_** | Thursday | November 21: 6:30pm - 9:30pm |
| | Friday | November 22: 6:30pm - 9:30pm |
| | Saturday | November 23: 8:30am - 7:00pm |
| | Sunday | November 24: 7:30am - 7:00pm |
| **_VENUE:_** | Latvian Canadian Cultural Centre<br>4 Credit Union Dr., North York, ON M4A 2N8 | |
| **_CONTACT:_** | **_Email: toronto@ishafoundation.org_** | **_Phone: 416 300 3010_** |
| **_REGISTRATION:_** | **_www.innerengineering.com/toronto_** | |

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

- மோட்கேஜ் பேமென்ட் பிந்திபோச்சு !
- புறப்பட்டி ரக்ஸ் பேமென்ட் பிந்திபோச்சு !
- கிரடிட் காட்டிலையும் எடுக்க காசு இல்ல !
- றினுவல் வந்திருக்கு ஆனால் வட்டி கூட போட்டிருக்கினம் !

*போனில எல்லாம் செய்து தரலாம் எண்டு சொல்லுவினம்! பிறகு ........................... ......*

இந்தா, அந்தா, எண்டு இழுத்தடிப்பு !

கடைசி நேரத்தில கையை விடுகிறது !

போன் அடிச்சா எடுக்கிறதில்ல , !!!

**Our New Rates:**

3 Yr Fixed Rate : 2.59 %
5 Yr Fixed Rate : 3.44 %
5 Yr Variable Rate : 2.45 %
OAC

உதுக்குத்தானே இப்ப வோக் - இன் **மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !

அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !



**CENTUM** Rapid Mortgages Inc. LIC # 10156

rapid realty inc.

**80 Nashdene Road, Suite # 211. Toronto, ON. M1V5E4**
**416-644-3555 / 416-259-2002**



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

# 25 ஆண்டுகால கிரிக்கெட் பயணம்

# விளையாட்டுத் தகவல்கள் 351

கடந்த இதழ் தொடர்ச்சி...

அக்டோபர், 1995: வேர்ல்ட் டெல் ரூ.31.5 கோடிக்கு வணிக ஒப்பந்தம் செய்ய உலகின் பணக்கார கிரிக்கெட் வீரரானார் சச்சின்.

1996 உலகக் கோப்பை: 2 சதங்கள் 3 அரைசதங்கள் 523 ரன்கள் சராசரி 87.16. ஒரு போட்டியில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக கிளென் மெக்ராவை 4 பவுண்டரி ஒரு சிக்சரை விளாச அம்பயரிடமிருந்து கடுப்பில் தொப்பியைப் பிடுங்கி சென்றார் கிளென் மெக்ரா. ஆகஸ்ட், 8, 1996ஆம் ஆண்டில் 23 வயதில் சச்சின் கேப்டனாக அறிவிக்கப் பட்டார். ஜனவரி 2 1998-உடன் கேப்டன்சி காலம் முடிவடைந்தது. தொடர்ச்சியாக 5 டெஸ்ட் போட்டிகளில் தோல்வி. மொத்தம் 17 டெஸ்ட் போட்டிகளில் 3-இல் மட்டுமே வெற்றி. மேற்கிந்திய தீவுகள் தொடரில் சச்சின் அபாரமாக ஆடிக் கொடுத்தும் அசார், ஜடேஜா ஆகியோர் போட்டிகளைத் தோற்றது ஆகிய ஏமாற்றம், மன வருத்தம், அழுத்தம் ஆகியவற்றுடன் சச்சின் கேப்டன்சியை துறந்தார்.

கோல்டன் 1998: அவுஸ்ரேலிய அணி இங்கு 3 டெஸ்ட் போட்டிகள் 5 ஒருநாள் போட்டிகள் தொடருக்காக இந்தியா வருகிறது. மும்பையில் கடும் பயிற்சியில் இருந்த சச்சின், ஷேன் வார்னுக்கு வேட்டு வைத்திருப்பது அப்போது அவுஸ்ரேலியர்கள் அறியவில்லை. மும்பைக்கும் அவுஸ்ரேலியா வுக்கும் நடைபெற்ற பயிற்சி ஆட்டத்திலேயே கடுமையாக தாக்கு தாக்கி 202 ரன்களை ஒரே நாளில் விளாசினார் சச்சின் ஷேன் வார்னுக்கு பலத்த அடி. மும்பை அவுஸ்ரேலியாவை வீழ்த்தியது. அதன் பிறகு சென்னை டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் வார்னை வீழ்த்தி மேலேறி வந்து ஆடி எட்ஜ் செய்தார் சச்சின். அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 71 ரன்கள் முன்னிலை பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய சச்சின் ஆக்ரோஷமாக 26 ரன்கள் எடுத்து உணவு உட்கொள்ள பெவிலியன் சென்றார். திரும்பி வந்ததுதான் தாமதம் ஷேன் வார்ன், ஸ்டீவ் வாஹ், மெக்ரா அனைவருக்கும் அடி. 155 ரன்களை எடுத்தார். இந்தியா அவுஸ்ரேலி யாவை வீழ்த்தியது. இந்தத் தொடரில் முதல் இரட்டை சதம் அடித்து இரண்டு சதங்கள் 3 அரைசதங்கள் என்று சச்சின் அசத்தினார்.



இந்தியா தொடரை 2- 1 என்று வென்றது.

ஷார்ஜா, 1998 ஏப்ரல்: இரண்டு அபாரமான அடுத்தடுத்த சதங்களை விளாசி இந்தியா வில் ஒருநாள் தொடரை கைப்பற்றிய அவுஸ்ரேலியாவை தனி மனிதனாக வீழ்த்தினார் சச்சின். ஜனவரி 30 2001 பாகிஸ்தானுக்கு எதிராக தனி மனித போராட்டம்: சென்னை டெஸ்ட் அது. 271 ரன்கள் வெற்றி இலக்கு. இத்தனைக்கும் முதுகுவலி சச்சினுக்கு. 136 ரன்களை எடுத்தார். 17 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆட்டமிழக்க இந்தியா 13 ரன்களில் தோல்வி. மார்ச் 20, 2001 அவுஸ்ரேலியாவுக்கு எதிராக கங்குலி தலைமையில் இந்தியா 3 டெஸ்ட் போட்டி களில் விளையாடியது. சென்னையில் சச்சின் மீண்டும் ஒரு சதம் எடுக்க அவுஸ்ரேலியா தொடர் வெற்றி முடிவுக்கு வந்து தொடரை 2 - 1 என்று தோற்று வெளியேறியது.

மார்ச் 31, 2001: இன்டோரில் அவுஸ்ரேலி யாவுக்கு எதிராக அதிரடி 139 ரன்களை ஒரு நாள் போட்டிகளில் முதன் முதலில் 10,000 ரன்களை எடுத்து சாதனை நாயகனானார். 13 ஆண்டுகள் கழித்து முதன் முதலாக ஸ்டம்ப்டு ஆன சச்சின்: இது போன்ற ஒரு அரிதான சாதனையை எந்த வீரரும் வைத்திருக்க முடியாது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு வீரர் 13 ஆண்டுகள் கழித்து ஸ்பின்னரிடம் ஸ்டம்ப்டு ஆகிறார். இங்கிலாந்தின் அஷ்லி ஜைல்ஸ், கேப்டன் நாசர் ஹுசைனின் லெக் ஸ்டம்பிற்கு வெளியே பந்து வீசும் உத்தியைக் கடை-பிடிக்க வெறுப்பான சச்சின் ஸ்டம்ப்டு ஆனார். ஆகஸ்ட் 22- 23 டான் பிராட்மேன் சாதனை சமன். ஹெடிங்லே மைதானத்தில் சச்சின் 193 ரன்கள். கங்குலியும் சதம். இந்தியா இங்கிலாந்தை இன்னிங்ஸ் வெற்றி பெற்று தொடரையும் சமன் செய்தது. இந்த சதம்தான் டான் பிராட்மேனின் 29வது சதத்தை சமன் செய்த சதம் ஆகும்.

2003 உலகக் கோப்பை கிரிக்கெட், தென் ஆபிரிக்கா- முதல் போட்டியில் இந்தியா அவுஸ்ரேலியாவிடம் தோல்வியடைய சச்சின் உட்பட அனைத்து வீரர்கள் வீட்டிலும் கல் எறியப்பட்டது. பெரும் குழப்பம், ஆனால் அடுத்தடுத்த போட்டிகளில் தோல்வியே இல்லை. காரணம் சச்சின். 673 ரன்களைக் குவித்தார். சராசரி 61 ரன்களுக்கும் மேல். பாகிஸ்தானுக்கு எதிராக அடித்த 98 ரன்கள் சச்சினின் சிறந்த அயல்நாட்டு ஒருநாள் சதங்களில் ஆகச் சிறந்தது. அவுஸ்ரேலியா சாம்பியன் ஆனால் சச்சின் தொடர் நாயகன். ஜனவரி 2004: அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சிட்னியில் 241 ரன்களை எடுத்தார். இந்த இன்னிங்ஸின் சிறப்பு என்னவெனில் கவர் டிரைவ் ஆடாமலேயே 241 ரன்கள் எடுத்தார். மார்ச் 2004 பாகிஸ்தானுக்கு எதிராக முல்டானில் சேவாக் முச்சதம் காண சச்சின் 194 ரன்கள் எடுத்தார். டிக்ளேர் செய்ததால்



அதிர்ச்சியடைந்து, ஏமாற்றமடைந்தார்.

மார்ச் 16, 2005: கொல்கட்டாவில் பாகிஸ்தானுக்கு எதிராக 52 ரன்களை எடுத்து டெஸ்ட் கிரிக்கெட்டிலும் 10,000 ரன்களை எடுத்து சாதனை புரிந்தார். இந்தியா இந்த டெஸ்டில் வென்றது.

அக்டோபர் 25, 2005 டென்னிஸ் எல்போவால் அவதிப்பட்டு வந்த சச்சின் கிரிக்கெட் வாழ்வு அவ்வளவுதான் என்று அனைவரும் நினைத்தனர், எழுதினர். ஆனால் நாக்பூரில் இலங்கைக்கு எதிராக 96 பந்துகளில் 93 ரன்களை விளாசினார். அப்போதுதான் புல் ஷாட்டை கைவிட்டு சமிந்தா வாஸ் பந்துகளை பெடல் ஸ்வீப் செய்யத் தொடங்கினார். கவாஸ்கரைக் கடந்தார். இந்திய சாதனையாளர் கவாஸ்கர் எடுத்த 34 சதங்கள் சாதனையை சச்சின் முறியடித்தார். 2005ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக 109 ரன்களை நாக்பூர் டெஸ்டில் எடுக்க 35வது சதமானது அது.

மார்ச் 2006: இங்கிலாந்துக்கு வலது தோள்பட்டை அறுவை சிகிச்சைக்கு செல்கிறார். இங்கிலாந்து ஒருநாள் தொடரில் இல்லை, மேற்கிந்திய தொடரிலும் இல்லை. செப்டம்பர் 14, 2006 மீண்டும் சச்சின். கோலாலம்பூரில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக டி.எல்.எ.்.ப். கோப்பையில் 148 பந்துகளில் 141 ரன்களை விளாசினார். முத்தரப்பு ஒருநாள் தொடர் இறுதிப் போட்டியில், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சிட்டினியில் 126 ரன்கள் எடுத்து இந்தியாவை வெற்றி பெற வைத்தார். அவுஸ்ரேலியாவில் ஒருநாள்போட்டிகளில் சச்சினின் முதல் சதமாகும் இது. இதனையடுத்து பிரிஸ்பன் மைதானத்தில் 91 ரன்கள் எடுக்கிறார். இந்தியா முத்தரப்பு ஒருநாள் தொடரில் முதன் முறையாக கோப்பையை வென்றது. தோனி தலைமை. லாரா சாதனை முறியடிப்பு. அக்டோபர் 17, 2008, மொகாலியில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அதிக டெஸ்ட் ரன்களுக்கான லாரா சாதனையை முறியடித்தார் சச்சின்.

நவம்பர் 5, 2009: ஐதராபாதில் அவுஸ்ரேலி யாவின் 351 ரன்களை எடுக்கும்போது சச்சின் டெண்டுல்கர் 141 பந்துகளில் 175 ரன்களை எடுத்து ஒருநாள் போட்டிகளில் 17,000 ரன்களைக் கடந்து சாதனை புரிந்தார். பிப்ரவரி 24, 2010, ஒருநாள் கிரிக்கெட்டில் 200. க்வாலியரில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக 147 பந்துகளில் சச்சின் இரட்டை சதம் எடுத்து முதன் முதலில் ஒருநாள் போட்டியில் இரட்டை சதம் சாதனை நாயகனானார். இந்தியா 401 ரன்கள் குவித்தது. தென் ஆப்பிரிக்கா 153 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

அக்டோபர் 2010, முதல் ஐசிசி விருதைப் பெற்று சர் கேரி சோபர்ஸ் டிராபியை பிடிக்கிறார். 2010ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை தட்டிச் சென்றார் சச்சின். ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் 2002 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதலிடம் பிடித்தார் சச்சின்.

டிசம்பர் 19, 2010: டெஸ்ட் போட்டியைக் காப்பாற்ற கடினமான தென் ஆப்பிரிக்கா பந்து வீச்சிற்கு எதிராக கடினமான பிட்சில் சதம் கண்டார் சச்சின். இது அவரது 50வது டெஸ்ட் சதமாகும்.

பிப்ரவரி 19, 2011: உலகக் கோப்பை கிரிக்கெட். சச்சினின் உச்சகட்ட மகிழ்ச்சிக் கணம். 5 முறை உலகக் கோப்பையை தொட்டுப் பார்க்க முடியாத சச்சின் கடைசியாக உலகக் கோப்பையை தூக்கினார். இங்கிலாந்து தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக சதம், பாகிஸ்தானுக்கு எதிராக 85. இந்தத் தொடரில் 432 ரன்களை 53 ரன்கள் சராசரியில் பெற்று சச்சின் ஒரு முடிவுடன் ஆடினார். உலகக் கோப்பையில் 2000 ரன்களையும் 6 சதங்களையும் எடுத்த சாதனையையும் சச்சின் நிகழ்த்தினார்.

மார்ச் 16, 2002: சாதனை சதம், ஆனால்... வங்கதேசத்திற்கு எதிராக சதம் எடுத்து 100வது சதம் எடுத்தார் சச்சின். ஆனால் இந்தியா தோல்வியை தழுவியது. டிசம்பர் 23, 2012: ஒருநாள் போட்டிகளிலிருந்து சச்சின் ஓய்வு அறிவித்தார். 463 ஒருநாள் போட்டிகளில் 18,426 ரன்களை விளாசினார். அக்டோபர் 2013: மொத்தம் வாழ்நாளில் இதுவரை 50,000 ரன்களை சச்சின் எடுத்து சாதனை புரிந்தார். அரைலட்சம் ரன்கள். அக்டோபர் 10, 2013: 2 டெஸ்ட் போட்டிகள் மீதமுள்ள நிலையில் சச்சின் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். 200வது டெஸ்ட் தனது கடைசி போட்டி என்று அறிவித்தார்.

எஸ். கணேஷ்





## நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 402

# ஆதன வியாபாரத்தில் 2013 இல் ஒக்ரோபர் 31, 2013வரை

கடந்த பல வருடங்களாக பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்வரும் வருடம், ஆதன வியாபாரத்தில் நெருக்கடியானதாக இருக்கலாம். இதுவே தாரக மந்திரமாக இருந்து வருகின்றது. ஆனால் நடப்பதுவோ வேறுமாதிரியாக உள்ளது. இதற்கு 2013 ஆம் ஆண்டும் விதிவிலக்காக இருக்க வில்லை என்பதே உண்மையாகத் தோன்றுகின்றது.

இதுவரையில் 2013 ஆம் ஆண்டு வியாபாரத்தின் விலையினை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரித் துள்ளது. கைமாறிய ஆதனத்தின் எண்ணிக்கையில் சிறிதளவு இறக்கம் ஏற்பட்டுள்ளது. கோடை காலத்தில் நீண்டகால வட்டிவீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் ஆதனம் வாங்கியவர்களில் ஒரு பகுதியினரிற்கு சிக்கல், நெருக்கடி ஏற்பட்டது. பிற்பாடு வட்டிவீதத்தில் சிறிதளவு இறக்கம் ஏற்பட நிலைமை சற்று ஆரோக்கியமாகக் காணப்பட்டது. ஆனால் முதல் ஆறு மாதங்களில் வியாபாரம் கடந்த வருடத்தை விட கூடியதாகக் காணப்பட்டது. சில பகுதிகளில் ஒன்றிற்கு மேற்பட்ட பலர் குறிப்பிட்ட ஆதனத்தை வாங்குவதற்காக போட்டியிடுவதனை (Offers) காணக் கூடியதாக உள்ளது. இந்நிலைமை குடியிருக்கும் ஆதனத்தில் மட்டுமல்லாமல், வியாபார நிலையங்களிலும் காணப்படுகின்றது.

### குறைந்த வட்டிவீதம்
*(Low interest rate)*

அமெரிக்கப் பொருளாதார நெருக்கடி, சிரியாவில் (Syria) தொடரும் உள்நாட்டு யுத்தம் எந்தவித தாக்கத்தையும் கனடிய பொருளாதாரத்தில் ஏற்படுத்தியதாக



தோன்றவில்லை. அமெரிக்க, ஐரோப்பிய பொருளாதாரம் ஆரோக்கியமான கட்டத்தை நோக்கி நகருவதுபோலவே தோன்று கின்றது. இதனால் கூடிய வட்டிவீதமும் அதிகரிக்கலாம் எனக் கூறினாலும், 2015 வரை வட்டிவீதம் அதிகரிக்கும் போலத் தோன்றவில்லை. கனடிய கடன்பழுவும் குறைவதாக நிதிமந்திரி நவம்பர் 12, 2013 அன்று தெரியப்படுத்தியுள்ளார்.

### புதிய வரவாளர்கள்
*(Canada's Appeal to Immigrants)*

இன்றும் உலக நாடுகளில் புதிய வரவாளர்கள் விரும்பி வரும் நாடுகளில் கனடாவும் ஒன்றாகவே காணப்படுகின்றது. கனடிய புறச்சூழ்நிலை அகச்சூழ்நிலை அவ்வாறு காணப்படுகின்றது. 250,000 இற்கும் மேற்பட்ட புதியவர்கள் கனடாவிற்கு வருகின்றபோது 150,000 இற்கும் அதிகமானவர்கள் ஒன்ராரியோவை தெரிவு செய்கின்றார்கள். இருப்பதற்கு இடம் தேவை தானே. நிலத்தின் அளவை அதிகரிக்க முடியாது.

### வாடகைக்கு பெறுகின்ற இடத்தின் நெருக்கடி - *(Low rental vacancy rate)*

அடுக்குமாடிக் கட்டிடத்தின் மனைகளின் வியாபாரம் குறிப்பிட்டளவு குறைந்த போதிலும் விற்பனையின் விலையில் பெரிதான மாற்றம் ஏற்படவில்லை. இதற்கு காரணமாக ரொறொன்ரோ மத்திய பகுதியில் 98% இற்கு மேற்பட்ட மனைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டு விடுகின்றன. இப்பொழுது (Vacancy rate only 1.7%) உடனடியாக விற்கத்தேவையில்லாத நெருக்கடியில்லாத நிலைமையில் வாடகைக்கு விடுவதே சிறந்ததாகலாம். இதற்கு உதாரணமாக விளம்பரப் பத்திரிகையின் Classified பகுதியில் வாடகைக்கு இருக்கும் பகுதி நல்ல உதாரணம்.

குறிப்பு - கடந்த 13 வருடங்களிற்கு மேலாக ஆய்வாளர்கள் பிழையானதையே எதிர்வு கூறுவது போலவே தோன்றுகின்றது. 2014 என்ன, புதிதாகவா இருக்கப் போகின்றது, பார்ப்போம்.

***USA'S :***

***Average income $54,600 per year.***
***10% of population owns 86% properties.***
***1% of population owns 46% properties.***


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

HOMELIFE HIGHER STANDARDS

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

## HOUSE FOR SALE
## KENNEDY &SHEPPARD



2 story house for sale. 6+1 Bedrooms 7 Washrooms, 3 garages, 2 kitchens. 7,200 Sq.ft. Huge backyard. 80 Feet frontage. Stone elevation. Hardwood /Granite/Marble floor. Quiet area. Asking price $2.2 million.

## HOUSE FOR RENT
### FINCH & MCCOWAN

3 bedrooms house for rent. One washroom, 1Parking. main floor only. Avail. anytime. Asking $1,325.

## Coin laundry For Sale Kennedy & Eglinton

A Highly populated. Surrended by apartment area. One Year new business. High quality washer & dryer. Money changing machine. Soap dispensor. Possible to have alteration person & laundry outlet. Very reasonable rent. Longe term lease possible.

## CONVENIENCE STORE FOR SALE
## MIDDLEFIELD & FINCH



Lotto, Tickets, Key cuts, Movie rental, (exclusive in the plaza) Convenience & Indian/Srilankan Groceries. Established Over 10 years. 200Sq.ft. Low Rent $3,500. Asking only 69,900

# வட மாகாணசபை அடுத்து என்ன செய்யப்போகின்றது?

வட மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று, மாகாணசபையின் இரு அமர்வுகளும் நடந்து முடிந்து விட்டன. மாகாணசபைக்கான நிரந்தர பணிமனை இன்னமும் பூர்த்தியாகவில்லை. அமைச்சு அலுவலங்களுக்கும் இதே நிலைதான். கைதடியில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கட்டடமும் அரைகுறையாகவே உள்ளது. வடமாகாண அமைச்சர்கள் தங்களுக்கு வசதியாக அல்லது கிடைத்த இடத்தில் வாடகைக்கு அலுவலகங்களை அமைத்துள்ளார்கள்.

இந்நிலையில், மாகாணசபைக்கான நிதி எப்போது கிடைக்கும்? எவ்வளவு நிதி கிடைக்கும்? அபிவிருத்தித்திட்டங்கள் மாகாண நிர்வாகத்திற்குள் வருமா? மாகாணசபை அமைப்பிற்குள் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது நிவாரணங்கள் கிடைக்குமா? என்பதெல்லாம் சாதாரண மக்களுக்கு புரியாத விடயங்களாக இருக்கின்றன. ஆனாலும், வறுமைப்பட்ட மக்கள் குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வடமாகாணசபை நிர்வாகத்தின் மூலம் தங்களின் வாழ்வாதாரத்திற்கு முன்னேற்றம் கிட்டும் என எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இவ்வருடத்தில் வட மாகாணசபை தேர்தல் நடைபெறுமா என்கிற நம்பிக்கையீனம் தமிழ் மக்களுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பற்கும் ஏன் சர்வதேசத்திற்கும் கூட இருந்தது. ஆயினும், இலங்கையின் ஜனாதிபதி ஒருவாறு அதனை நடத்தி முடித்துள்ளார். தென்னிலங்கை கடும்போக்காளர் களின் எதிர்ப்பினையும் மீறி அவர் இதனை நடத்தியுள்ளார்.

பொதுநலவாய மாநாடு சுமுகமானதோர் சூழ்நிலையில் நடைபெறவேண்டும். அதனால், தமிழ் மக்களின் அபிலாசை-களை புறந்தள்ளினாலும், சர்வதேச நாடுகளை சமாளிக்க வேண்டும் என்கிற நோக்கில் இதனை அவர் நடத்தியுள்ளார் என்பதுதான் உண்மை. சர்வதேச சமூகம் இலங்கைக்கு விடுத்து வந்த கோரிக்கைகளில் ஒன்று வட மாகாணசபைக்கான தேர்தல் உடன் நடத்தப்பட வேண்டும் என்பதுமாகும். ஆகவே, ஏதோ ஒன்றை உடனடியாக செய்து சர்வதேச சமூகத்தின் நற்பெயரை பெறவேண்டும் என்கிற தேவை ஜனாதிபதிக்கு இருந்தது. அதனாலேயே இவ்வருட இறுதிக்குள் இத்தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்திற்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழக்கப்படக்கூடாது என சிங்கள கடும்போக்காளர்கள் கடுமையாக எச்சரித்து வந்தனர். தேர்தல் நடந்து முடிந்ததன் பின் அப்பிரச்சினை பெரிதாக கிளம்பவில்லை. அவ்விடயம் தற்போது பேசப்படாத ஒன்றாகவுள்ளது. பொதுநலவாய மாநாடு முடிவடைந்ததும் இப்பிரச்சினை மேலெழும்பக்கூடிய சாத்தியம் உள்ளதாகவே தெரிகின்றது. இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் அரசியல் ஆய்வுகளின்படி அபிவிருத்தி என்பது கூட மத்திய அரசாங்கத்தின் கைகளிலேயே இருக்கும் எனவும், வட மாகாணசபை ஒரு இடைத்தரகு அமைப்பு போலவே செயற்படலாம் எனவும் தெரிய வருகின்றது.



தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலுக்கு முன்பாக மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பித்தல், வடக்கிலிருந்து இராணுவத்தை குறைத்தல், உயர்பாதுகாப்பு வலயங்களை முழுவதுமாக விடுவித்தல், அபிவிருத்திட்டங்களை நேரடியாக முன்னெடுத்தல் என பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் அரசியல் தீர்வு என்பது நீண்டகாலமெடுக்கும் ஒரு விடயம். அதுவும், தீர்வு என்பது கூட்டமைப்பினர் கூறுவதைப் போலவோ, தமிழ் மக்கள் எதிர்ப்பார்ப்பதைப் போலவோ அமையப்போவதில்லை என்பது மக்களுக்குத் தெரியும். வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை முற்றாக நீக்குவது என்பதும் உடனடியாக சாத்தியமில்லை. ஆனால், சிவில் நிர்வாகத்தில் படையினர் தலையிடுவதை முற்றாக தடுத்து நிறுத்த வட மாகாணசபை-பயால் நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே, வடமாகாணசபை நிர்வாகம் உடனடிப் பிரச்சினைகளுக்கான திட்டங்களையும் நீண்டகால பிரச்சினைக்கான திட்டங்களையும் தனித்தனியாக கையாள வேண்டும். போரின் பின்னால் உள்ள மக்களின் பிரதான பிரச்சினை முதலில் கவனத்திலெடுக்கப்பட வேண்டும். போரினால் குடும்பங்கள் பல உழைப்பாளிகளை இழந்துள்ளன. குடும்பத் தலைவர்கள் ஊனமுற்றவர்களாக செயலிழந்துள்ளனர். பெற்றோரை இழந்து அநாதைகளாகி யுள்ள பிள்ளைகள், பிள்ளைகளை இழந்து வாடும் பெற்றோர் என பல்வேறு பிரச்சினைகள் வன்னியிலுள்ளன. இறுதிப்போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்கள் முழுப் பொருளாதாரத்தையுமே இழந்துள்ளனர். வீதிகள், பாதைகள் திருத்துவதை மட்டுமே போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திட்டங்களாக அரசாங்கத்தால் காண்பிக்கப்படுகின் றன. பொதுமக்களின் வாழ்வதார நிலை கவனத்தில் எடுக்கப்படவில்லை. எனவே, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார பிரச்சினை குறித்து அவசரமாக ஒரு வேலைத்திட்டத்தை வடமாகாண நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். முதலில் அது குறித்து முறையான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

**- விகிர்தன் -**

இலங்கை அரசாங்கத்தினூடாக இவற்றை உடனடியாக மேற்கொள்ள முடியாவிட்டால் உதவிபுரியும் சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற முயல வேண்டும். அதற்கு மத்திய அரசு தடைகளை விதிக்குமானால் சட்டவிதி முறைகளுக்கு ஊடாக அவற்றைக் கடக்க வேண்டும். வட மாகாணத்தின் முதல்வராக முன்னாள் நீதியரசர் ஒருவர் வந்திருப்பதால் இவ்விடயத்தை மிக நுட்பமான முறையில் நகர்த்த முடியும் என்கிற எதிர்பார்ப்பு உள்ளது. போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்பது அவசரமும் அவசியமானதுமாகும். வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்களின் அதிகப் பெரும்பான்மையான வாக்குகளால் பெருவெற்றி பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பதவிக்காக தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டமை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதன் காரணமாக வடமாகாண முதலமைச்சரும், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் வெற்றிபெற்ற மாகாணசபை உறுப்பினர்களை திருப்திப்படுத்தும் வகையில் சிலவற்றை செய்யவேண்டி வந்தது. வட மாகாணசபைக்கு நான்கு அமைச்சர் பதவிகளே இருந்த போதிலும் ஏனைய உறுப்பினர்கள் சிலருக்கும் அமைச்சுப் பொறுப்புகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. 'மக்களுக்காக' என்பதை விடவும் பதவிகளுக்காகவே இவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கோருகின்றார்களா என்கிற சந்தேகம் தமிழ் மக்களுக்கு அதிகமாகவே ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதோர் சூழலில் வட மாகாணசபை நிர்வாகம் அடுத்த கட்ட நகர்வை மக்களுக்கானதாக வேகமாக நகர்த்தி தங்களைத் தெரிவு செய்த மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்.

# மாவீரர் புகழ் பாடுவோம்!

மாவீரர் புகழ் பாடுவோம் - நாம்
மாவீரர் புகழ் பாடுவோம்
அருள் கொண்ட நெஞ்சங்கள் அஞ்சாத வேங்கைகள்
பெருவீரர் சமர் செய்து மண்ஆண்ட மாவீரர் - புகழ்

காலாறி நிற்கவில்லை, சுடுகளத்தில்
மனமுடைந்து, பீதிகொண் டோடவில்லை.
பேராறு பாய்ந்தென்னப் பெய்திட்ட கணையெல்லாம்
பாராது எதிரிபடை நீறாக்கி யழித்தவர்கள் புகழ்

பசியென்று சோரவில்லை, களைப்பென்று
தரைவீழ்ந்து துயில் கொள்ளச் சாயவில்லை
படை நின்ற இடங்கண்டு தடைதாண்டி முன் சென்று
அடலேறாய்ப் விறன்விஞ்சப் பகைசாய்த்த மாவீரர்

மழையென்று ஓடவில்லை, குளிரென்று
தளர்வுற்றுப் புறமோடி யொதுங்கவில்லை
அரவணைத் தரையூர்ந்து ஆர்ப்பரித்துப் பாசறைகள்



உறக்கத்தில் உடைத்தெறிந்து எதிரிபடை அழித்தவர்கள்

நீரென்று தரிக்கவில்லை, பேரலைகள்
தடையென்று போனவழி திரும்பவில்லை
படகேறிக் கடலூடு படைக்கலங்கள் தகர்த்துவிட்டு
பொடியாகிப் பலியாகிச் சிலையாகிப் போனவர்கள்

- மாரீசன்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# கனடிய...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

விளையாட்டு பொருட்களின் முடிந்த மின் கலங்களை மாற்றுதல், சிகரெட் வாங்குதல் மற்றும் laundry detergent, diet coke போன்றவற்றை மனைவிக்கு வாங்கி கொடுத்தல் போன்றவற்றிற்கு உபயோகப்படுத்துபவர்.

• றொப் ஃபோர்ட் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர். அதனால் அவருடன் சக ஊழியர்கள் வாகனத்தில் பயணம் செய்ய பயப்படுவார்கள்.

• றொப் ஃபோர்ட் மாநகரசபை ஊழியர்களை மதுபானம் (Vodka) வாங்கி தனது வீட்டில் கொடுக்குமாறு கேட்டுள்ளார்.

• றொப் ஃபோர்ட் சென். பற்றிக்ஸ் (2012) மறுநாளில் அதிகாலை (4.00am) City Hall இல் பணியாற்றிக் கொண்டிருந்த பெண் பாதுகாவலரிடம் பாலியல் வார்த்தைகளால் ஏசியுள்ளார்.

• சென். பற்றிக்ஸ் நாளில் (2012) மது அருந்தும் கடையில் இருந்து மதுபோதையில் வெளியேற்றப்படும்போது றொப் ஃபோர்ட் தனது தகப்பனாரை நினைத்து அழுதார்.

றொப் ஃபோர்ட் இன் ஆதரவாளர் ஒருவர் CBCக்கு குறிப்பிடுகையில் றொப் ஃபோர்ட் உடன் வேலை செய்தவர்கள் மற்றும் பலரை கடந்த 4 அல்லது 5 மாதகாலமாக பொலிசார் ஒட்டுக்கேட்டு எடுத்தவை மேற்கூறியவை மட்டும்தான் என்றால் இதுபற்றி பத்திரிகைகள் பெரிதுபடுத்துவது கவலைக்குரிய விடயம் என்றார்.

ரொரன்ரோ மாநகர சபையில் நடைபெற்ற விவாதத்தின் போது பதிலளிக்கையில் றொப் ஃபோர்ட் கடந்த 2 வருடங்களில் தான் தடை செய்யப்பட்ட போதைப்பொருளை பணம் கொடுத்து வாங்கியதாக ஒத்துக் கொண்டுள்ளார். றொப் ஃபோர்ட் மேலும் பதிலளிக்கையில் தான் மது பாவனைக்கோ அல்லது போதைப்பொருள் பாவனைக்கோ அடிமையாகவில்லை என்றார்.

இறுதியாக றொப் ஃபோர்ட், தான் எல்லாவற்றையும் கூறிவிட்டதாகவும் ஒருவரால் எத்தனை முறை திரும்பத்திரும்ப மன்னிப்பு கேட்க முடியும் என்றார். தான் தவறு செய்துவிட்டேன். என்னால் நடந்து முடிந்தவற்றை மாற்றமுடியாது. பழையதை விட்டு விட்டு என்னை தெரிவு செய்த மக்களுக்கு சேவை செய்யப் போகின்றேன் என்றார்.

றொப் ஃபோர்ட் போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக சிறிதுகாலம் விடுப்பு எடுத்து மருத்துவ ஆலோசனை பெறுமாறு கேட்டதற்கு அவர் அவ்வாறு செய்யப்போவதாகவும் ஆனால் எதிர்வரும் பண்டிகைக்கால விடுமுறையுடன் ஒருசில நாட்கள் மட்டுமே அதிகமாக விடுப்பு எடுக்கப்போவதாகவும் கூறினார். ரொரன்றோ மாநகரசபையில் நடைபெற்ற விவாதத்தில் பலதடவை அதீத உணர்ச்சி யுடன் பேசினார். சிலவேளைகளில் அவரின் சகோதரரால் அவரைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

# ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் புதிய உறுப்பினர்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபைக்கு புதிய 14 நாடுகள் உறுப்பினராக கடந்த நொவம்பர் 12, 2013 இல் தெரிவு செய்யப்பட்டன. இந்த புதிய 14 உறுப்பு நாடுகளும் பிரித்தானியா, பிரான்ஸ், மாலைதீவு, மசிடோனியா, மெக்சிகோ, மொராக்கோ, நமீபியா, தென்ஆபிரிக்கா, சீனா, ரஷ்யா, சவூதி அரேபியா, வியட்நாம், கியூபா மற்றும் அல்ஜீரியா ஆகும்.

இதில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஐந்து நாடுகளான சீனா, ரஷ்யா, சவூதி அரேபியா, வியட்நாம் மற்றும் அல்ஜீரியா, ஐக்கிய நாடுகள் சபை ஆய்வாளர்களை தமது நாட்டுக்குள் மனித உரிமை சம்பந்தமான விசாரணை நடத்த அனுமதிக்காத நாடுகள் ஆகும். இதனால் இவர்களது தெரிவால் மனித உரிமை சபையின் நம்பிக்கை கேள்விக்குறி யாக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகளை கண்காணிக்கும் அமைப்புக்கள் கரிசனை தெரிவித்து உள்ளன. ஐ.நா மனித உரிமை சபையில் 47 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதில் ஒவ்வொரு நாடும் 3 வருடகாலம் உறுப்பினர் ஆக இருக்க தெரிவு செய்யப்படும். ஒரு நாடும் தொடர்ந்து ஆறு வருடகாலத்திற்கு மேல் உறுப்பினராக இருக்க முடியாது.

இந்த புதிய 14 நாடுகள் உட்பட 47 நாடுகளை கொண்ட மனித உரிமை சபையின் முன்னால் பல மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருப்பதாக மனித உரிமைகளை அவதானிக்கும் அமைப்பை சேர்ந்த Peggy Hicks தெரிவித்துள்ளார். அவையாவன, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசை பொறுப்புக்கூற வைத்தல், மத்திய ஆபிரிக்க நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணை, சிரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை ஆராய்தல் போன்றவையாகும்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சில நாடுகளின் தெரிவு மனித உரிமை விடயத்தில் கரிசனை கொள்ள வைத்தாலும் மனித உரிமை சபையில் எந்த நாட்டிற்கு Veto உரிமை இல்லாதது ஒரு நம்பிக்கை தரக்கூடிய விடயமாகும். ஏனெனில் மனித உரிமை சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களது முடிவே இறுதி முடிவாக இருக்கும் என்றார்.

# போராட்டங்களைக் கண்டு சோர்ந்து போகப்போவதில்லை! கெலும் மக்ரே

போராட்டங்களைக் கண்டு சோர்ந்து போகப் போவதில்லை என சனல் 4 ஊடகத்தின் ஊடகவியலாளர் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார். தடைகள் மற்றும் போராட்டங்களை கடந்து வடக்கு நிலைமைகள் பற்றிய செய்திகள் அறிக்கையிடப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கெலும் மக்ரே குழுவினர் ரயில் மூலம் வடக்கிற்கு பயணம் செய்தபோது அனுராதபுரத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனால், அனுராதபுரத்துடன் மக்ரே குழுவினர் திரும்பியிருந்தனர். தடைகளைக் கருத்திற் கொள்ளாது தமது பணிகளை தொடர உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



தாங்கள் வவுனியாவிற்கு ரயில் மூலம் பயணம் செய்கின்ற விபரம் எவ்வாறு போராட்டம் நடத்தியோருக்கு தெரிந்தது என்பது பற்றி இலங்கை அரசாங்கத்திடம் விளக்கம் கோரத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகள் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு முரணானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் நல்ல ஊடகவியலாளர்கள் இருப்பதாகவும் அவர்கள் சுயாதீனமாக இயங்க முயற்சிக்க வேண்டுமெனவும் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்கு செல்லமுயன்ற போது தாமும் தமது சக ஊடகவியலாளர்களும் முகம் கொடுக்க நேர்ந்த இக்கட்டான சூழ்நிலை தொடர்பாகவும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பிலும் கெலும் மக்ரே கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த அவர் இந்த விடயத்தைக் கூறினார். தாம் ஊடகம் என்ற வகையில் நாட்டில் எந்தவொரு பகுதிக்கும் செல்லக் கூடிய அனுமதியுடன் இலங்கை வந்ததாக குறிப்பிட்டார். அத்துடன், இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமக்கு இந்தப் பகுதிகளுக்கு சென்று சுதந்திரமாக செயற்பட முடிந்ததாக தெரிவித்தார். தற்போது ஆர்ப்பாட்டத்தின் மூலம் தாம் தடுக்கப்பட்டதாக குறிப்பிட்டார். பொதுநலவாய வரையறைகளுக்கு அமைய தமக்கு சுதந்திரமாக செயற்பட உரிமை உள்ளது. ஜனநாயகம், கருத்து சுதந்திரம், மனிதவுரிமைகள் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு வரையறுத்துள்ள அனைத்து விடயங்களையும் இலங்கை மீறியுள்ளது என்று தெரிவித்தார். பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்காக செய்தி சேகரிப்புக்கு வந்துள்ள சனல் 4 தொலைக்காட்சியின் விவரணத் தயாரிப்பாளர் கெலும் மக்ரேயும், ஜேம்ஸ் மில்லரும் கிளிநொச்சிக்கான தேசத்திற்கு மகுடம் என்ற தொடருந்தில் வவுனியா நோக்கி புறப்பட்டனர். இதன்போது, அநுராதபுரம் தொடருந்து மையத்தில் வைத்து பொதுமக்களால் அவர்கள் சென்ற தொடருந்து முன்னோக்கி செல்லாத வகையில் தடுக்கப்பட்டனர். அன்றைய செய்தித்தாள் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு காண்பித்த ஜேம்ஸ் மில்லர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே வந்திருப்பதாக கூறினார். அத்துடன், தமக்கு வழங்கப்படும் இந்த கோஷத்துடனான வரவேற்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும், ஜேம்ஸ் மில்லர் குறிப்பிட்டார்.

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தினைத் தொடர்ந்து அவர்களின் வவுனியா பயணம் ரத்து செய்யப்பட்டு விசேட வாகனத்தில் சனல் 4 ஊடகவியலாளர்கள் கொழும்புக்கு திரும்பியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

BrokerTeam
INSURANCE SOLUTIONS INC.
DENNIE CHAN MBA
Associate Broker
On your side
•We represent over 10 insurance companies and offer the best premium
•House & Auto, Business, Condo
•Get a free quote today and see how you can save
Bus: 905.415.1188 Ext.120
Fax: 905.475.6448
Markham Branch
8787 Woodbine Ave, #218
Markham, ON L3R 9S2
dennie313@gmail.com
www.BrokerTeam.ca
Cell: 647.293.6980

# கனடிய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அடுத்து சீற்றத்துக்கும் உள்ளானதாகத் தெரிவித்தார்கள். அத்தகைய சந்திப்புகள் ஓரஞ்சாயாது, மரியாதையாக நடத்தப்படவில்லை என்பது இத்தால் மெய்ப்பிக்கப்படுகிறது.

• மேகர் அறார் (Maher Arar) ஒரு கனடியக் கடவுச்சீட்டையே பயன்படுத்தினார். எனினும், கனடிய அதிகாரிகளிடமிருந்து ஒரு பொய்த் தகவலைப் பெற்ற ஐக்கிய அமெரிக்கா, அவரை அவரது தாய்நாடாகிய சிரியாவுக்கு அனுப்பியது. அவர் கனடா திரும்ப அனுமதிக்கப்படுவதற்கு முன்னர், ஓராண்டுக்கு மேலாகச் சிரியாவில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டார். கனடிய, சிரிய அரசுகளிடையே சாணக்கியர் மட்டத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பெறுபேறாக அவர் கனடா திரும்பும் வாய்ப்புக் கைகூடியது. அப்புறம் அவர் விடயத்தில் ஒரு பகிரங்க விசாரணை நடத்தப்பட்டது. நாட்டின் பாதுகாப்புக்கு அவரால் ஆபத்து விளையும் என்பதற்கோ, அவர் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர் என்பதற்கோ எவ்வித சான்றும் இல்லை என்பதே அவ்விசாரணையின் முடிபாகும். அப்துல்லா அல்மலிக்கி (Abdullah Almalki), அகமது எல் மாதி (Ahmed El Maati), முயாயெது நுரெதின் (Muayyed Nureddin) ஆகியோர் சிரியாவிலும், எகிப்திலும் வைத்துச் சித்திரவதை செய்யப்படுவதற்கு இட்டுச்சென்ற நிகழ்வுகளில் கனடா வகித்த பங்கு பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அறார் ஆணைய (The Arar Commission) அறிக்கை விதந்துரைத்தது.

• 2003-ல் தெற்கு ஆசிய மாணவர்கள் 24 பேர் ரொறன்ரோவில் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுடைய பள்ளிக்கூடம் திடீரென மூடப்பட்ட பின்னர் அவர்களுடைய நுழைவனுமதி காலாவதி ஆனதால் அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அது நூலிழைத் திட்டம் (Project Thread) எனப்பட்டது. (மாணவர்கள் பலரையும் போல்) அவர்களும் வாழ்க்கைத் தரம் குன்றியவர்கள். 4-5 பேராகக் கூடி வசித்தவர்கள். கனடிய கேந்திர மையங்களின் படங்களை வைத்திருந்தவர்கள். பாகிஸ்தான் நாட்டு, பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.



பாகிஸ்தானின் முழு மக்கள்தொகையில் ஏறக்குறைய அரைவாசித் தொகையினர் அந்த மாகாணத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள். அதனால்தான் போலும் அவர்கள் அறிதுயில் கொள்ளும் அல் கைதா-கீழறையாளிகள் என்பது முன்பக்கச் செய்தி ஆயிற்று. அப்புறம் அவர்கள்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளும் கைவிடப்பட்டன. ஆனால், அதனை அறிவித்த ஊடகங்கள் அவர்கள் முதலில் கைது செய்யப்பட்ட விபரங்களில் புலனைச் செலுத்தவில்லை. "Project Thread என்பதைப் புறவயமாக நோக்கும் எவரும், முக்கியமாய் அவர்கள் முஸ்லீங்கள் என்றபடியால்தான் RCM அவர்கள் விடயத்தில் பாரிய அளவில் மட்டுமீறிச் செயற்பட்டுள்ளது என்னும் முடிபுக்கே வரமுடியும்' என்று அனைத்து நாட்டு மக்கள் சுதந்திர கண்காணிப்புக் குழுமத்தைச் (International Civil Liberties Monitoring Group) சேர்ந்த வொறன் ஆல்மன்ட் (Warren Allmand) தெரிவித்துள்ளார்.

- தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை

# நடுகல் முன் தலை தாழ்த்துவோம்!

மண்ணோடு மண்ணான மாவீரரே! – எங்கள்
மனதோடு உறவாடும் மறவர்களே!!
விண்ணேகி எமைக்காத்த புனிதர்களே! – உங்கள்
விருப்பங்கள் நனவாகும் மாவீரரே!!



தமிழுக்கு உயிர்தந்த மாவீரரே! – எங்கள்
தன்மானம் காத்திட்ட புலிவீரரே!
தமிழன்னை தளைபோக்கப் போராடியே - நீண்ட
சரித்திரம் படைத்திட்ட தீரர்களே!!

நேருக்கு நேர்நின்று போராடினீர்! – எதிரி
நீசத்த னங்களை வெளியாக்கினீர்!!
யாருக்கு மஞ்சாது களமாடினீர்! - ஈழ
நாட்டிற்கு வித்தாகி வேராகினீர்!!

வீழ்ச்சியின் விளிம்பைநாம் தொட்டபோதும் - மீண்டும்
வேகமாய் புத்துயிர் பெற்றெழுந்தே
சூழ்ச்சிகள் யாவையும் வெற்றிகொள்வோம்! - ஈழம்
சுதந்திரம் பெற்றிடத் தொண்டுசெய்வோம்!!

வித்தான வீரர்க்குக் கல்நாட்டுவோம்! - அந்த
வீரரின் நடுகல்முன் தலைதாழ்த்துவோம்!!
சொத்தான எம்மண்ணை நாம்மீட்கவே – எங்கும்
துணிவோடு நாம்கூடிப் போராடுவோம்!

மாவீரர் துயில்கின்ற இல்லங்களை – எதிரி
மண்மேடு ஆக்கியே மூடினாலும்
காவிய நாயகர் நினைவுயாவும் - நின்று
காலாதி காலமாய் வாழுமையா!

- அருள்மணி

# The 13th Annual Ontario open Martial arts championships



நவம்பர் 09, 2013 அன்று மிசிசாகாவில் அமைந்துள்ள Mentor College என்னும் இடத்தில் 13வது வருடாந்த தற்காப்புக் கலைப்போட்டிகள் ஒன்ராரியோ மட்டத்தில் நடத்தப்பட்டது. நூற்றுக் கணக்கான போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த போட்டியாளர்களான யதுசன் முரளீதரன், தர்சன் வீரசிங்கம், அபிநயா முரளீதரன் ஆகிய மூவரும் பங்குபற்றியது மட்டுமல்லாது அவர்கள் பங்கேற்ற ஏழு பிரிவுகளிலும் வெற்றி ஈட்டியுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படத்தில் அவர்கள் தங்கள் ஆசிரியரான சென்சாய் ரஜீவன் தனபாலசிங்கம் அவர்களுடன் காணப்படுகின்றனர். இவர்களுக்கு 'விளம்பரம்' பத்திரிகை பாராட்டுக்களை தெரிவிக்கிறது.



# காலத்தோடு வளரும் கணினிகள் - 33

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் மைக்கிரோ சொவ்ற் எக்சல் (Microsoft Excel) மென்பொருளினை அறிமுகப்படுத்தும் நோக்கில் எனது கட்டுரை யினை எழுதியிருந்தேன். இந்த மென்பொருள் பற்றி மேலும் சில விடயங்களை எழுத விரும்புகின்றேன். இப்பொழுது எக்சலில் மேலும் ஒரு சிறு பயிற்சியைச் செய்து பார்ப்போம். மவுஸ் பொயின்ரரை cell C10 இல் வைக்கவும். செல் (Cell) C10இல் Name என்ற சொல்லைத் தட்டச்சு செய்யவும். செல் (Cell) D10 இல் Income என்ற சொல்லைத் தட்டச்சு செய்யவும். மவுஸ் பொயின்ரரை வெவ்வேறு செல் (Cell) களுக்கு நகர்த்துவதற்கு விசைப்பலகையில் உள்ள அம்புக்குறிகளைப் (Arrows) பயன்படுத்தலாம். C11 முதல் C15 வரை Joseph, Abdul, Roshan, Kamal, Siva ஆகிய பெயர்களைத் தட்டச்சு செய்யவும். D11 முதல் C15 வரை 1200, 1400, 1100, 2000, 1900 ஆகிய இலக்கங்களைத் தட்டச்சு செய்யவும். இந்த உதாரணத்தில் சில பெயர்களும் அவர்களின் வருமானமும் தரப்பட்டுள்ளன. உங்களுக்கு இங்கே கொடுக்கப்பட்ட பெயர்களின் அகர (Alphabetical) வரிசையில் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு ஒழுங்குபடுத்தும் பொழுது அவர்களின் வருமானமும் மாற்றமின்றி இடம் மாறவேண்டும். இதனை மைக்கிரோ சொவ்ற் மென்பொருளில் எவ்வாறு செய்து கொள்ளலாம் என்று கவனிப்போம். இதற்கு மவுஸ் பொயின்ரரை C11 ற்கு நகர்த்தவும். இங்கே முதலாவது பெயர் உள்ளது. இப்பொழுது மவுஸின் இடது புறமுள்ள பட்டனை அழுத்தியவாறு நகர்த்தி (Drag) D15 வரை தெரிவு செய்யவும். இப்பொழுது Data மெனுவைத் தெரிவு செய்யவும். பின்பு Tool Bar இல் Sort என்ற தெரிவைச் செய்ததும் Sort Dialogue Box தோன்றும்.

இதில் Sort By Name இனைத் தெரிவு செய்துவிட்டு ழுமு பட்டனை அழுத்தியதும் ஒழுங்கு வரிசைப்படுத்தல் (Sorting) நடைபெறும். Income நிரலிலும் உரிய முறையில் மாற்றம் நடைபெறும். பல வரிசை களையும், நிரல்களையும் கொண்ட பெரிய அட்டவணையையும் இந்த உதாரணத்தில் விளக்கியவாறு ஒழுங்கு வரிசைப் படுத்திக் கொள்ளலாம். மைக்கிரோ சொவ்ற் எக்சல் எவ்வளவு பயனுள்ள ஒரு மென்பொருள் என்பதை இந்த உதாரணத்தின் மூலம் உணர்ந்திருப்பீர்கள். பல வரிசைகளையும், நிரல்களையும் கொண்ட பெரிய அட்டவணை யையும் இந்த உதாரணத்தில் விளக்கியவாறு ஒழுங்கு வரிசைப் படுத்திக் கொள்ளலாம்.




இப்பொழுது இந்த அட்டவணையில் உள்ள தரவுகளுக்கு வரைபு ஒன்றை எவ்வாறு செய்யலாம் என்று கவனிப்போம். முதலில் நிரல்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புக் கள் உட்பட C10 முதல் D15 வரை தெரிவு செய்யவும். இப்பொழுது Insert மெனுவிற்குச் சென்று Chart Tool Bar இல் Column Chart இனைத் தெரிவு செய்யவும். இப்பொழுது அட்டவணைக்குரிய வரைபு கிடைக்கும். இந்த அட்டவணையில் விரும்பியவாறு பல மாற்றங்களையும் செய்யக்கூடிய வசதி மைக்கிரோசொவ்ற் எக்சல் மென்பொருளில் உள்ளது. இவ்வாறாக பல்வேறு வசதிகள் இந்த மென்பொருளில் இருப்பதால் தொழில் நுட்பம், கணக்கியல் துறைகள் சார்ந்தோர் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றார்கள். கணித்தல்களையும், ஒழுங்கு வரிசைப்படுத் தல்களையும் செய்யக்கூடிய வசதியினால் இந்த மென்பொருளைப் பலர் தொழில் ரீதியாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். விஞ்ஞான ஆய்வாளர்களும், உயர்கல்வி கற்கும் மாணவர்களும் இந்த மென்பொருளை அதிகம் பயன்படுத்தி வருகின்றார்கள்.




இந்த மென்பொருள் தரவுத்தளம் (Database) சார்ந்த வேலை களுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. மிகவும் பெரிதான விரிதாள் (Spread sheet) இனைக் கொண்டமை, பல விரிதாள்களைக் கொண்டுள்ளமை, தரவுத்தள வேலைகளுக் குரிய சூத்திரங்களைக் கொண்டுள்ளமை, வரைபு கீறுவதற்குரிய வசதிக- ளைக் கொண்டுள்ளமை போன்றவற்றால் தரவுத்தளப் பயன்பாடுகளுக்கும் அதிகளவில் பயன்படுகிறது. ஏனைய தரவுத்தள மென் பொருள்களை விடவும் பயன்படுத்துவதற்கு இலகுவானதாக இருப்பதும் இந்த மென்பொருள் அதிகளவில் தொழில் நிறுவனங்களில் தரவுத்தளம் சார்ந்த வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

அட்டவணை வடிவத்தில் உள்ள கோப்புக்களைத் தயாரிப்பதற்கும் இந்த மென்பொருள் அதிகளவில் பயன்படுத்தப்படு கிறது. விரிதாள் நிரல்கள், வரிசைகள் இனைக் கொண்டதாக இருத்தலால் எந்த வடிவத்தில் உள்ள அட்டவணையையும் மிகவும் இலகுவாக இந்த மென்பொருள் மூலம் செய்து கொள்ளலாம். இந்த மென்பொருளில் நிறைய சூத்திரங்கள் (Formulas) இருப்பதால் கணித்தல் வேலைகளுக்குப் பிரபல்யம் பெற்ற மென் பொருளாக உள்ளது. இந்த மென்பொருளில் எவ்வகையான சூத்திரங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள Formulas மெனுவிற்குச் செல்லவும். Statistical Functions, Financial Functions, Trignometric Functions எனப் பலவேறு வகையான சூத்திரங்கள் இங்கே உள்ளதை நீங்கள் கவனித்துக் கொள்ளலாம்.

இந்த மென்பொருளைப் பயன்படுத்தாது நீங்கள் இருந்தால் இந்தத் தொடர்கட்டுரை யில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களின் உதவியோடு இந்த மென்பொருளைப் பயன்படுத்திப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள். தொழில்புரியும் இடங்களிலும் உங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம்.

தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்....



- அகணி -
authorakani@yahoo.com

வரிகள் (காலை)
வாராது காப்போம்

TAX RELATED SERVICES
INCOME TAX & HST

Unfiled Returns From 2005
- Filing Under Voluntary Disclosure Program (VDP)
- Tax Appeals
- SR & ED Investment Tax Credits
- Individual and Corporate Taxation

> Company Incorporations
> Business Registration
> Business Plans
> Emergency Business Loans - upto $5 M

Call:Siva-416.901.0929 / Yoga-416.492.7957
Email: siva@sivassolutions.com www.sivassolutions.ca
Sivas Solutions
708-419 Markham Rd toronto M1J 3E1

# கார்த்திகை நினைவுகளும் கால மாற்றமும்!



## தாயக மடல்

இது நவம்பர் மாதம். (கார்த்திகை) நவம்பர் மாதம் என்றால் தாயகத்திலுள்ள மக்களுக்கும் புலம்பெயர் மக்களுக்கும் உணர்வு பூர்வமாக நினைவுக்கு வருவது மாவீரர் நாள் மட்டுமே. நவம்பர் 27ஆம் திகதி அந்நாள் அனுட்டிக்கப்பட்டாலும் நவம்பர் மாதத்தின் ஆரம்பத்திலிருந்தே அந்நாளை நினைவு கூர்வதற்கான பணிகள் பரபரப்பாக ஆரம்பித்து விடும். தாயகத்திலுள்ள பொதுமக்களின் வீடுகள் தொடக்கம் பாடசாலைகள் நிறுவனங்கள், வணிக நிலையங்கள் என சகலவற்றிலும் பணிகள் நடைபெறும்.

மாவீரர் துயிலுமில்லங்களை சிரமதானம் மூலம் துப்புரவாக்குதல், அழகு படுத்துதல் என பல வேலைகளில் மக்கள் ஈடுபடத் தொடங்கிவிடுவர். இறுதி வாரத்தில் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினரை கௌரவிக்கும் நிகழ்வுகள் நடைபெறும். காடுகளிலும் பற்றைகளிலும் மட்டுமே வளர்ந்து காணப்படும் கார்த்திகைப் பூக்கள் இந்நாளில் தான் அதன் சிறப்பைப் பெறுகின்றன. 27ஆம் திகதி மாவீரர் துயிலுமில்லங்களை நோக்கி மக்கள் அணி அணியாக நகர்வர். மாவீரர்களின் உறவுகள் மட்டுமல்லாது அனைத்து மக்களும் துயிலுமில்லக் கல்லறைகளை கட்டியணைத்து கண்ணீர் விடும் காட்சி மனதை உருக்கக் கூடியது. புலம்பெயர் உறவுகளும் மாவீரர் நாளில் தாங்கள் வாழும் நாடுகளில் உணர்வு பூர்வமாக பல்வேறு நிகழ்வுகளை மேற்கொள்வர்.

நாட்டில் இடைக்கிடையே தோன்றும் சமாதான உடனபடிக்கை காலத்தில் தாயகத்திற்கு வரும் சிங்கள பொதுமக்களின் முக்கிய பார்வைக்குரிய இடமாக மாவீரர் துயிலுமில்லங்கள் விளங்கின. இத்துயிலுமில்லங்களைப் பார்த்து கண்கலங்கிய சில சிங்களத் தாய்மாரை நான் பார்த்திருக்கின்றேன். ஒரு தாய் என்னிடம் கண்கலங்கியபடி கூறிய வார்த்தைகள் இப்போது நினைவில் இருக்கின்றது. ‘முதியவர்களான எங்களை புதைக்க வேண்டிய இடத்தில் இளையவர்களான இவர்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்களே. எங்களுக்கான இறுதிக் கடமையை செய்ய வேண்டியவர்களல்லவா இவர்கள்..’ என்று கவலையுடன் கூறினார் அவர். இன்று தினமும் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் வடக்கிற்கு வரும் சிங்களவர் பலர் தங்கள் இராணுவத்தின் வெற்றியைக் கண்டுகளிக்கின்றார்கள். துடைத்தழிக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களையும், வீழ்ந்து கிடக்கும் கட்டடங்களையும் கண்டு தங்கள் வீரர்களின் ஆற்றலைப் போற்றுகிறார்கள்.

ஆம், இப்போது காலமும் காட்சிகளும் மாறியுள்ளன. மாவீரர் துயிலுமில்லங்கள் பெரும்பாலும் இன்று புல்டோசரால் உழுது, துடைத்தழிக்கப்பட்டுள்ள போதும், அவற்றின் அடையாளங்களையும் மாவீரர்களின் நினைவுகளையும் தமிழ் மக்களின் நினைவுகளிலிருந்து துடைத்தழிக்க முடியாமலுள்ளது.



- வன்னியிலிருந்து ஆதித்தன் -

அந்த நினைவுகளை இல்லாமல் செய்ய அந்த நினைவுகளோடு இருப்பவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னர் வரும் ஆண்டுகளின் மாவீரர் நாட்கள் அச்சுறுத்தலுடனேயே தொடர்கின்றன. நவம்பர் மாதங்கள் சிறிலங்கா இராணுவத்தினரதும். புலனாய்வுத் துறையினரினதும் சிறப்பு அவதானிப்புக்குரியனவாக மாறியுள்ளன. மாவீரர் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த இடங்கள், மக்களின் வீடுகள், பாடசாலைகள் என சகல இடங்களும் நோட்டமிடப்படுகின்றன. கார்த்திகை மாதத்தில் இந்து சமயத்தவர்கள் கார்த்திகை விளக்கீடு அனுட்டிக்கவும் முடியாது. கார்த்திகை தீபங்கள் பூட்ஸ் கால்களால் உதைத்தழிக்கப்படுகின்றன. ஆலயங்களில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகளும் அணைக்கப்படுகின்றன. ஆலய வழிபாடுகளும் தடுக்கப்படுகின்றன. அர்ச்சகர்கள் அச்சறுத்தப்படுகின்றனர். மாவீரர் நாளுக்கும் கார்த்திகை தீபத்திற்கும் வேறுபாடு தெரியாத வெறியர்களாக அவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

இந்த அச்சுறுத்தல்களை எல்லாம் கடந்து மாவீரர் நாளை மக்கள் ஏதோ விதத்தில் அனுட்டிக்கத்தான் செய்கின்றனர். துயிலுமில்லங்களில் ஒன்றிரண்டு விளக்காவது அன்றைய நாளில் ஏற்றப்படுகின்றனதான்.

கடந்த மாவீரர் நாளில் யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தீபமேற்றியதும் அதனால் அவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டதும் நினைவிலிருக்கலாம். அதனால் இம்மாவீரர் நாளில் யாழ். பல்கலைக்கழகமும் கடுமையாக அவதானிக்கப்படுகின்றது.

இப்போது குறிப்பிடக்கூடிய முக்கிய செய்தியொன்றும் உள்ளது. அதாவது யாழ். பல்கலைக்கழகம் கடந்த 8ஆம் திகதி மூடப்பட்டு விட்டது. டிசெம்பர் 2 ஆம் திகதியே திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு பல்கலைக்கழகங்கள் மூடப்படுவதாக அரசாங்கம் அறிவித்தது. இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் நவம்பர் 9ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரை மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ். பல்கலைக்கழகம் ஏன் 8ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 2ஆம் திகதி வரையும் மூடப்பட வேண்டும் என்கிற கேள்வி எழுகின்றது. அக்கேள்விக்கான விடையும் இப்போது தெரிய வந்துள்ளது. மாவீரர் நாளையொட்டியே இந்த மூடல் நடவடிக்கை யாழ். பல்கலைக்கழகத்திற்கு. விடுதிகளிலுள்ள மாணவர்களும் வெளியேறி விட்டனர். அவர்கள் வெளியேறுமாறு மறைமுகமாக அச்சுறுத்தப்பட்டதாக ஒரு மாணவர் தெரிவித்தார். ஏனெனில் பல்கலைக்கழகம் மூடப்பட்டாலும் பல்கலைக்கழக விடுதிகளில் மாவீரர்களுக்கு தீபமேற்றப்படலாம் என்கிற சந்தேகமும் அச்சமும் படைத்தரப்பிற்கு உள்ளது. புலிகளை ஒழித்துவிட்டோம் என்று மார்தட்டும் அரசாங்கத்திற்கும் அரச படைகளுக்கும் மாவீரர்கள் தொடர்பில் ஏன் இத்தனை அச்சம் என்று கேட்கின்றனர் தமிழ் மக்கள். மாவீரர்கள் பற்றிய நிகழ்வுகளைத் தடுக்கும் இவர்களால் எங்கள் மனங்களில் பதிந்துள்ள நினைவுகளைத் தடுக்க முடியுமா என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

கடந்த வடமாகாண சபைத் தேர்தலில் மாவீரர் தினமும் ஒரு முக்கிய தேர்தல் பரப்புரையாக இருந்தது. ‘இத்தேர்தலில் அதிகப்படியான வாக்குகளில் வென்று நாம் மாவீரர் நாளை அனுட்டிப்போம், மாவீரர் துயிலுமில்லங்களில் தீபமேற்றுவோம் என்று அவர்கள் பொதுமக்கள் மத்தியில் பரப்புரை செய்தனர். வென்ற பின்னரும் அவர்கள் விடவில்லை. கூட்டங்களில் தீர்மானங்களும் நிறைவேற்றினர். அதனை ஊடகங்களிலும் வெளியிட்டனர்.

இதனையடுத்து மாவீரர் துயிலுமில்லங்கள் இருந்த இடங்களில் இப்போது படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். மாவீரர் துயிலுமில்லங்களுக்குள் எவரும் எப்பக்கமும் புக முடியாதபடி முட்கம்பிகள் இடப்பட்டுள்ளன. யாரோ ஒருவர் ஒரு விளக்கையாவது துயிலுமில்லங்களில் ஏற்றமுடியாதபடி நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களும் குறிப்பாக மாவீரர்களின் உறவினரும் இந்த நிலை குறித்து கவலை கொண்டுள்ளனர்.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

AMBIHA SILK (Fancy Jewellery)
FINCH & MIDDLEFIELD

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்: 416.297.5261



REAL TEAM
Thinking of selling? Think
Buy. Sell. Invest
SOLD
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Markham
$ 649,900
4+2 Bedrooms
Basement Apartment
Renovated house
Great location
Whitby
$ 312,000
Detached,3 bedrooms
close to all amenities
Good Starter home
Great neighbourhood
Toronto
$ 154,900
Condominium
2 Bedrooms
Nice and clean
Great building for price
Downtown-Toronto
$ 299,000
Luxury condominium
1plus Den
600 sq ft
Best price for the area
Markham
$ 829,900
Detached,4 Bedrooms
close to all Amenities
Fully Updated home
Call for more Details
Toronto
$ 349,000
Semi-Detached,4 Beds
close to all Amenities
Finished Basement
Call for more Details
Toronto
$ 74,900
Well Established
Convenient/ Grocery
Close to all amenities
Call for more details
Markham
SOLD
$ 759,900
Detached,5 Bedrooms
Close to all amenities
Don't miss this
Great buy
Seelan Siva Aiyadurai
Real Estate Broker
416.451.0271
Ravi R Raveendran
Real Estate Broker
416.817.8479
Toronto
$ 349,900
Great location
Golden opportunity
Ideal for retail or office
Lots of parking
Markham
$ 539,000
3+1 Bedrooms
Basement apartment
Hardwood flooring
Close to all amenities
Toronto
SOLD
$ 499,900
Detached,3 Bedrooms
Well maintained
Finished basement
Close to all amenities
Toronto
$ 299,900
3 Bedroom Condo
Close to town centre
24 hrs security
Close to everything
Brantford
$ 2,498,000+stock
Esso On The Run
30 Minutes from GTA
Recently renovated
Excellent cash business
Richmond Hill
$ 749,900
Detached, Side Split
Upper Richmond Hill
Walk to Yonge Street
Premium size lot
Stouffville
$ 429,900
Semi detached house
Approx 3 years old
3 Bedrooms
Lots of upgrades
Ajax
$ 569,000
Detached,4 Bedrooms
Corner House
Quiet neighbourhood
Close to all amenities
Jayanthi Sritharan
Real Estate Broker
416.918.5872
Markham
$ 858,000
Detached,4 Bedrooms
Seven years old
Recent upgrades
Ground floor Den
Simcoe
$ 1,199,900
Esso Gas station
45 minutes from Gta
Heavy traffic area
Great investment
Toronto
$ 199,900
2 Bedroom Condo
Close to all amenities
Ttc at door step
Many upgrades
Toronto
SOLD
$ 417,900
Detached,3+1 bedrooms
Finished basement
Bright and sunny
Beautiful landscaping
Justin William
Real Estate Broker
416.803.7344
HOMELIFE
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave East, suite 203, Toronto, ON. Tel: 416-321-6969
This is not intended to solicit the buyers or sellers under contract
Each office independently owned and operated

# 'மனோரஞ்சனா - கனகசபாபதி திருத்த சட்ட பிரிவு' மாகாண அரசின் ஒரு புதிய சட்ட திருத்தம்

## கனடிய தகவல் தொடர் 207

MANORANJANA - KANAGASABAPATHY ACT SEC 78.1 AMENDED IN 'ONTARIO DISTRACTED DRIVING LAW'



இப்படியொரு செய்தி கனடா வாழ் தமிழர்கள் பலரும் அறியாத ஒரு தகவலாகவே சில நேரம் இருக்கலாம்.

ஒன்ராரியோ வீதி ஒழுங்கு சட்டத்தின் ஒரு பிரிவினை திருத்தி அமைக்கும் ஒரு சட்டமூலம் அண்மையில் மாகாண சபை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் பிரேரணையாக கொண்டு வரப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெகு விரைவில் அது அமலாக்கப்படவுள்ளது. அந்த சட்டப்பிரிவின் பெயர், **"மனோரஞ்சனா - கனகசபாபதி திருத்த சட்டப்பிரிவு"** என்பதாகும். வீதி ஒழுங்கு சட்ட ஏடுகளில் இனிமேல் காலங்களில் இந்த பிரிவில் இப்படியொரு பெயரினை காணலாம்.

கடந்த ஒகஸ்ட் 13, 2013! ஸ்ரீல்ஸ் & மிடில்பீல்ட் (Steels & Middlefield) சந்திப்பில் உள்ள பஸ் தரிப்பில் பஸ் ஏறும் போது கைத்தொலை பேசிக் கதையில் வான் ஓட்டி வந்து மோதி அநியாயமாக பலியான திருமதி. மனோரஞ்சனா - கனகசபாபதியின் பெயரில் அதே மாதிரியான கொடிய விபத்துகள் தொடர்ந்து நடைபெறக்கூடாது என்னும் நோக்கில் வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசியில் கதை அளப்பவர்களுக்கு எதிராக இறுக்கமான தண்டனைகள் இந்த சட்ட திருத்தத்தின் மூலம் அமல்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பாக மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிக்கும் போது, கடந்த 2012 யில் மாகாணம் முழுவதும் மாகாண பொலிசார் (O.P.P), நகரசபை பொலிசார் (City Police Service) ஆகியோரின் ரோந்து நடவடிக்கைகளில் மொத்தமாக 235,000 பேர் வாகனமோட்டும் போது தொலைபேசி பாவித்தவர்களாக குற்றம் சாட்டப்பட்டார்கள் எனவும், அதில் பலர் மீண்டும் மீண்டும் பிடிபடுபவர்கள் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்தும் போது கைத்தொலைபேசி உபயோகிப்பது தடை செய்யப்பட்டது. பிடிபடுபவர்களுக்கு தண்டனைப் பணம் $155 டொலர் மட்டுமேயாகும். அத்துடன் வாகன மோட்டும் சாரதி அனுமதிப்பத்திரத்தல் ஒரு சிறு குற்றமாக பதிவு செய்யப்படும். புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் எதுவுமில்லாத காரணங்களாலும் தொடர்ந்து அதன் பாதிப்புகள், தாக்கங்கள் அந்த குற்றத்தினால் வாகனம் செலுத்துபவருக்கு ஏற்படாத காரணத்தினாலும் இந்த தவறு தொடர்கின்றது. அன்று நடந்த அப்பெண்ணினை பலி கொண்ட விபத்தினை தொடர்ந்து இதனை ஒரு இறுக்கமான நிலைமைக்கு கொண்டு வந்து இந்த குற்ற செயல்களினையும், அதனால் தொடரும் விபத்துகளையும் குறைக்க வேண்டும் என ஸ்காபரோ மாகாணசபை உறுப்பினர் திரு. பாஸ் பால்கீசூன் (Mr. Bas Balkissoon) அவர்கள் செயலில் இறங்கினார்.

**மனோரஞ்சனா - கனகசபாபதி வீதி ஒழுங்கு சட்ட திருத்தத்தின் பிரேரணையினை முன் எடுத்த மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் - திரு. பாஸ் பால்கீசூன்**

கைத்தொலைபேசி உரையாடலில் கவனம் திரும்பிய வாகன சாரதியினால், பஸ் தரிப்பில் நின்ற திருமதி மனோரஞ்சனா - கனகசபாபதி என்ற தமிழ் பெண்ணின் அநியாயமான உயிரிழப்பு தமது தொகுதியில் நடந்ததை தொடர்ந்து இத்தகைய தவறு செய்பவர்கள் கடுமையான முறையில் தண்டிக்கப்படல் வேண்டும் என்ற சட்டதிருத்தத்தின் பிரேரணையினை மாகாண நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பாஸ் பால்கீசூன் என்பவர் யார்?

1952 ஆம் ஆண்டு பிறந்தவர். இந்தியாவினை பூர்வீகமாக கொண்டு, கரும்பு தோட்டங்களில் வேலை செய்வதற்காக வெள்ளைக்கார ஏகாதி பத்தியத்தினால் கப்பலில் கொண்டு வந்து கரீபியன் கடல் தீவில் இறக்கப்பட்ட வம்சத்தில் வந்தவர். கரீபியன் கடல் பகுதியில் உள்ள 'ரினிடாட் & ரொபாகோ' (Trinidad & Tobago) என்ற சிறு தீவே அவரது தாயகமண்.

இவர் 'ஸ்காபரோ ரூஜ் ரிவர்' (Scarborough Rough River) தொகுதியிலிருந்து 2005 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபைக்கு லிபரல் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஆவார். இதற்கு முன்பு 1988 ஆம் ஆண்டிலிருந்து இப்பகுதியிலிருந்து ரொறொன்ரோ நகரசபையின் பிரதிநிதியாக (City Councillor) பதவி வகித்தவர். தமது தொகுதியில் பல்லின மக்களிடையே நன்கு அறிமுகமும் செல்வாக்கும் உடைய ஒருவர் ஆவார்.

சில அமைச்சகங்களில் நாடாளுமன்ற உதவியாளராகவும் பணி புரிந்த இவர் அரசியலுக்கு வருவதற்கு முன்பு 17 வருடங்கள் 'பெல் கனடா' (Bell Canada) கம்பனியின் முகாமைத்துவ பிரிவில் பணி புரிந்தவர். திருமணமானவர். மூன்று பிள்ளைகள் உண்டு.

**மனோரஞ்சனா - கனகசபாபதி வீதி ஒழுங்கு சட்டதிருத்தத்தின் புதிய தண்டனை**

(Manoranjana - Kanagasabapathy Act Sec 78.1 Amended)

வீதி ஒழுங்கு சட்டத்தின் திருத்தப்படி வாகனம் செலுத்தும் போது கைத்தொலை பேசியில் பேசுவோரின் தண்டனை என்பது பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- தண்டனைப்பணம் $300-$700 வரை விதிக்கப்படும். (முன்னர் $155 டொலர் மட்டுமே தண்டனைப்பணமாக இருந்தது)

- குற்றசாட்டு பதிவில் போகும் போது மூன்று புள்ளி மதிப்பீடுகளை எதிர்கொள்ள வேண்டும். (முன்னர் குற்றசாட்டு என்பது ஒரு சிறு குற்றமாக பதிவில் போகுமே தவிர புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் ஏதுமில்லை)

**குற்றசாட்டினை வரைவிலக்கணப் படுத்தும் கனடிய நீதிமன்ற தீர்ப்பு**

இப்படி ஒரு வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்து வரப்பட்டது!

இந்த வழக்கின் தீர்ப்பினை தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டவர் அப்பீல் கோர்ட்டுக் குப் போனார். அங்கு வழங்கப்பட்ட தீர்ப்பு வாகனம் செலுத்தும்போது கைத்தொலை பேசியின் உபயோகம் (Ontario Distracted Driving Law) தொடர்பான குற்றசாட்டின் உறுதியான ஒரு வரைவிலக்கணமாக அண்மையில் உருவாக்கப்பட்டது.

சம்பவம் இதுவே தான்!

சந்தியில் சிவப்பு சைகை ஒளியில் நின்ற அந்த வாகன சாரதி காருக்குள் கீழே விழுந்த கைத்தொலைபேசியினை கீழே குனிந்து கையால் எடுத்து வைக்க வேண்டிய இடத்தில் வைக்கும் போது, பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் அந்தக்கணம் கண்டு விட்டார்.

கைத்தொலைபேசியில் அந்த நேரம் அழைப்பினை ஏற்று கொண்டதோ? அல்லது எவரையாவது அழைத்ததோ? என்ற பதிவுகள் ஆதாரங்கள் எதுவும் இல்லை. கீழே விழுந்த கைத்தொலைபேசியினை சந்தியில் வாகனம் நிறுத்தும்போது கையில் எடுத்ததை தவிர எந்தவிதமான தப்பும் சட்டத்தினை மீறி நடக்கவில்லை. என்ன துர்அதிர்ஷ்ட காலமோ அந்தக் கணம் வீதியில் அருகே வந்த பொலீஸ் உத்தியோ கத்தரின் கண்ணில் இருந்து தப்பமுடியாமல் போய்விட்டது.

தண்டனை ரிக்கற் வழங்கப்பட்டது. தண்டனை ரிக்கற்றினை எதிர்த்து நீதிமன்றத்திற்கு போனார். அங்கு குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டது. விடாது அப்பீல் கோர்ட்டுக்கு போயும் தப்பிக்க முடியவில்லை. இவரது தீர்ப்பில் அப்பீல் நீதிமன்றம் பின்வருமாறு குற்றசாட்டினை ஆங்கிலத்தில் உறுதியாக வரைவிலக்கணப்படுத்தியது.

'No person shall drive a motor vehicle on a highway while holding or using a handheld wireless communication device or other prescribed device that is capable of receiving or transmitting telephone communications, electronic data, mail or text messages'

அதாவது வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசியினை கையில் மட்டும் வைத்திருந்தால் கூட அது குற்றமாக கருதப்படும் என இங்கு ஆங்கிலத்தில் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. (ஆனால் அவசர இலக்கம் 911 க்கு அழைப்பதில் மட்டும் விதிவிலக்கு இந்த குற்றசாட்டு தொடர்பான சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

கனடாவிலுள்ள ஏனைய மாகாணங்களில் வாகனம் செலுத்தும்போது கைத்தொலை பேசியை உபயோகித்தால் தண்டனை எப்படியிருக்கும்?

**புதிய சட்ட திருத்தத்தில் தப்புக்குரியவர்களை தாக்கும் பாதிப்புகள்**

- பாரிய பணத்தண்டனை
- மூன்று வருடங்கள் பதிவிலிருக்கும் மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்பினால் வாகன காப்புறுதிக்கு செலுத்தும் அநியாயமான மேலதிக கட்டணங்கள் மூன்று வருடங்களுக்கு தொடரும்.

அன்று! அந்த ஈழத்தமிழ் பெண்ணின் மரணத்திற்கு காரணமான 40 வயது நிரம்பிய திரு. வின்ஸ்ன்ற் பாகோபி ஆர்விஸ் (Mr. Vincent Bacobe Arvis) என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தை நான்கு



**சிவ. பஞ்சலிங்கம் B.Com.,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# MATH WORLD

The Latest and Most Effective Math Program
For

# Grade 12 Advance Function

**By November, if your child does not have an average of:**

# 85%

Or more in Advanced Functions or Calculus
This program should seriously be considered,
Because all of Ontario's best Universities want
a high average in Math.

**With more than 23 Years of Experience in Teaching,**
**Our students are scoring averages of 90 and above.**
**We are so proud to be in this field.**

**For Details**
**Sharma 416-666-5515**

*Location: Markham and Steeles*
***This program will be continued till the final exam review***

TBC Toronto Business College

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DECEMBER 9th

**Personal Support Worker(PSW)**

26 Weeks (NACC Diploma)

**FREE TRAINING**

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்.

Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000

**OTHER DIPLOMA PROGRAMS**

- ACCOUNTING & PAYROLL ADMINISTRATOR
- BUSINESS ADMINIISTRATION
- COMPUTERIZED ACCOUNTING
- MEDICAL OFFICE ADMINISTRATOR

**Certificate Courses**

MS Office 2010, Quick Books 2012
Simply Accounting 2011, Accpac 5.6
Canadian Securities Course
Online Stock Trading
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

Career Colleges Ontario

**416-291-5155**

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மைநாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)


# 'மனோரஞ்சனா...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடங் களுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கனடாவுக்கு வந்து வந்துள்ளார். அனுமதி பத்திரம், கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விலாசம் மாறினாலும் பொலிசாருக்கு அறிவிக்க வேண்டும். நீதிமன்ற வழக்கின் தீர்ப்பில் சாரதி அனுமதி பத்திரம் பல வருடங்களுக்கு தடை செய்யப்படுவதுடன், சில மாதங்கள்

| மாகாணம் | தண்டனை பணம் | புள்ளிமதிப்பீட்டு இழப்புகள் | அமல் செய்யப்பட்ட தினம் |
|---|---|---|---|
| பிரிட்டிஷ்கொலம்பியா | $167 | 3 | பெப்ரவரி, 2010 |
| அல்பேட்டா | $172 | - | செப்ரெம்பர், 2011 |
| சாஸ்காஸ்சுவான் | $280 | 4 | ஜனவரி, 2010 |
| மனிற்றோபா | $200 | - | யூலை, 2010 |
| ஒன்ராரியோ | $155 | - | ஒக்ரோபர், 2009 |
| கியூபெக் | $115-$154 | - | ஏப்ரல், 2008 |
| நியூபவுண்லாந்து | $100-$400 | -4 | ஏப்ரல், 2003 |
| பிரின்ஸ் எட்வோட் ஜலண்ட் | $250-$400 | 3 | ஜனவரி, 2010 |
| நோவாஸ்கொஷியா 1ஆம் முறை | $164 | | ஏப்ரல், 2008 |
| 2ஆம் முறை | $222 | | |
| 3ஆம் முறை | $337 | | |
| நியூபுறுண்ஸ்வீக் | $172.50 | 3 | யூன், 2011 |
| யூகோன் | $250 | 3 | ஏப்ரல், 2011 |
| வடமேற்குபிரதேசம் | $100 | 3 | ஜனவரி, 2012 |

நுணுவிற் மாகாணத்தில் இதுவரை இன்னும் சட்டம் அமலில் இல்லை.



குடியேறியவர். கனடாவில் அனுமதி பத்திரம் பெற்று 1½ வருடங்களாக கம்பனி ஒன்றின் சிறு கியூப் வான் செலுத்தும் தொழிலை செய்து வந்தார். இப்போது வாகனமோட்டும் கிரிமினல் குற்றங்கள் உட்பட ஏழு குற்றசாட்டுகளில் வழக்கு தொடரப்பட்டு $50,000 டொலர் பிணையில் வெளியே சிறை செல்வதும் தவிர்க்க முடியாது. அத்துடன் இதனை எதிர்கொள்வதுடன் பதிவிலிருக்கும் கிரிமினல் குற்றத்திலிருந்து தப்பமுடியாது. ஏனெனில் கிரிமினல் குற்றப்பதிவுகள் கனடாவில் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.


**COMMERCIAL UNIT FOR SALE**

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

**Pl. Call: 416.451.0271 / 416.315.9397**

# கோள்களின் இயக்கத்திற்கான விளக்கம்

## சார்பியல் - 34

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

மேற்கூறப்பட்ட எடுத்துக் காட்டில் இன்னொரு விடயத்தினையும் அவதானிக்கலாம். மாபி-ளின் இயக்கமானது தொடர்ந்து அதேமாதிரி இருக்கப் போவதில்லை. வளைவான பாதை-தயில் இரும்புக் குண்டினை வலம் வந்து கொண்டிருக்கும் மாபிள் மெதுமெதுவாக இரும்புக் குண்டினை நோக்கிக் கீழே இறங்கும். இரும்புக் குண்டு இருக்கும் இடத்தின் உயர்ந்த வளைவான இடத்தினை அண்மித்ததும் மாபிளின் இயக்கத்தில் வித்தியாசத்தினைக் காணலாம். இதுவரை யில் வந்தது போலல்லாது மாபிளின் இயக்கம் ஒரு ஆட்டம் போலக் காணப்படும். மேலும் கீழும் அசைந்து அசைந்து இயங்கிப் பின்னர் இரும்புக் குண்டுடன் சேர்ந்து விடும். இந்த விதமான இயக்கம்தான் கதிரவளைச் சுற்றிக் காணப்படும் கோள்களில் காணப்படுகிறது. அதாவது வளைவான பரப்பில் இயல்பாக இயங்கும் மாபிளைப் போன்றே, கதிரவனைச் சுற்றிக் காணப்படும் வளைவான வெளிநேரப் பரிமாணத்தில் கோள்கள் இயல்பாக இயங்குகின்றன. வளைவு கூடியதாகக் காணப்படும்



கதிரவனுக்குக் கிட்டியதான இடத்தில் உள்ள புதன், எங்களது எடுத்துக்காட்டில் இயங்கிய மாபிளைப் போன்று மேலும் கீழுமாக வேகமாக ஆடி ஆடி இயங்குவதே, அந்த வித்தியாசமான இயக்கத்திற்குக் காரணம்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் கதிரவனின் கோள்கள் எல்லாமும் மெது மெதுவாக கதிரவனை அண்மித்துக் கொண்டுதான் இருக்கின்றன. அதாவது புதன் கோளினைப் போன்றுதான் இயங்குகின்றன. ஆனால் அக்கோள்கள் இருக்கின்ற இடங்களின் வளைவுகள், புதன் இருக்கும் இடத்தின் வளைவினைப் போலப் பெரியதாக இல்லாதபடியினால், அவற்றின் இயக்கங்கள் சீரானவை போன்று காணப்படுகின்றது. எமது புவியும் புதன் போன்றே தனது இயக்கத் தளத்தினை மாற்றுகின்றதுதான். ஆனால் 1000 வருடங்களில் ஒருபாகை செக்கன் வில-கலைக் கொண்டிருப்பதால் அது எங்களுக்குத் தெரிவதில்லை. இவ்விதம்தான் ஏனைய கோள்களின் இயக்கங்களும் உள்ளன. சிறப்புச் சார்புத் தத்துவத்தின் ஊடாக, சக்தியின் ஒருவகையாக சடங்களின் திணிவினை அயன்ஸ்ரைன் காட்டினார். அதுதான் பிரபலமான சமன்பாடான $E = mC^2$ இதில் ஈர்ப்பினதோ அல்லது விசைகளினதோ குறுக்கீடு என ஒன்றுமில்லை. அதனால் பொருட்களின் திணிவினது இயல்புகளை 'சக்தி-உந்தம்' என்பதால் இனம் காணலாம் என அயன்ஸ்ரைன் எண்ணினார். எனவே, நியூட்டனின் ஈர்ப்பு விதியில், திணிவு என்பதை சக்தி-உந்தம் எனப் பொதுமைப் படுத்திப் பார்ப்பதன் மூலமாக, ஈர்ப்பினுக்கு புதிய விளக்கம் அளிக்க முடியும் என்பதனைக் கண்டு கொண்டார். இவரது இந்தச் சிந்தனையானது சக்தி வேறு, சடம் வேறு என்ற நிலையினை மாற்றியது. சக்தியும், சடங்களின் திணிவும் ஒரே மாதிரி யான விளைவுகளையே பேரண்ட வெளியில் காட்டுகின்றன என்ற சிந்தனை அவருக்கு எழ, அவரது நோக்கம் இலக்கு தெளிவாயிற்று. அதனால் சக்தியின் ஒரு வடிவமான ஒளியும் ஈர்ப்பின் விளைவில் இருந்து தப்புவதில்லை, ஈர்ப்பின் விளைவி னைக் காட்டக் கூடியது என்பதும் முடிவாயிற்று. அது அவரின் பொதுச் சார்புத் தத்துவத்திற்கு இன்னமும் மெருகூட்டியது.

ஒளியின் பாதை விலகல்

சடமும் சக்தியும் ஒன்றுதான் எனவும், சக்தியின் உறைந்தநிலையே சடம் எனவும் சிறப்புச் சார்புத் தத்துவம் மூலமாகக் காட்டிய அயன்ஸ்ரைனின் கவனத்தில் ஒளிபற்றிய கரிசனையும் வந்நது. விண்வெளி யில் விண்மீன்களின் செய்திகளை இந்த ஒளி காவி வருகின்றதல்லவா. பல மில்லியன் ஒளியாண்டு தூரங்கள் பயணப்பட்டு வருகையில் பெரிய திணிவுகளைக் கொண்ட


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




தொடர்ச்சி 18ஆம் பக்கம்


Seeking freedom from DEBT?
We offer Total Debt Free Solutions

Instant relief with one easy monthly payment. SAVE thousands of dollars.

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
- We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
- We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
- We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பதிற்கு உரிய வழிமுறை செய்தல்
- We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

K.T. Keeran
Credit consultant
Debt Free Credit Solution Inc.
PHONE: 416.434.1522
MOBILE: 416.834.7227
FAX: 1.877.800.7899



Web: http://www.paycontrolled.ca
Email: keeran@paycontrolled.ca
ADDRESS:
SUITE #303, MILNER BUSINESS COURT,
TORONTO ONTARIO M1B 3C6



FREE initial consultation

SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY.
CONTACT DEBT FREE CREDIT SOLUTION FOR A FREE INITIAL CONSULTATION



# A Career for Success

**Automation Technology**
- Emerson (Control techniques) ladder logic, with CTnet communication and Modbus TCP/IP
- Allen Bradley RSLogix 5000 Ladder logic, With Ethernet IP communication
- HMI development, utilizing Modbus TCP/IP and Ethernet IP communication

Training with Real World Componant (Motors, Sensors, VFT, Encoder, PLC, Beckhoff, Conveyor, Analog I/O, Safety Switch)

**Diploma Courses**
- Office Administration - 24 weeks
- Accounting and payroll - 24 weeks
- Computerized Accounting - 42 weeks

**Special Certificate Programs CAD/CAM Technology with CNC SETUP**
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading

**Multimedia & Graphic Design**
- Basic Film Making & Camera
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

**Steel Detailing using TEKLA**

**Bank Teller Course**
**Cashier Course**

**Computer Technology**
- PC technician (A+)
- Programs - C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development
  - HTML, CSS, JAVASCRIPT
- LINUX systems

**Accounting Softwares**
- Quick Books
- Simply Accounting
- Accpac
- MS Office

2006க்குப்பின் EI அல்லது Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக் கற்பதற்கு தகுதி உடையவராகலாம்

நீங்கள் 42 வாரத்துக்கு 1. Living expenses, 2. Daycare fees 3. Transport expenses பெறுவதற்கு தகுதியுடையவராகலாம்

**COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000**

**beta College**
of Business & Technology

Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere), Scarborough, ON, M1H 3C7


# கோள்களின்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

விண்மீன்களையும் தாண்டித்தான் ஒளி வருகின்றது. ஒளி சக்தியின் ஒரு வடிவம் என்பதால், விண்மீன்களின் ஈர்ப்பின் வலிமை யானது ஒளியையும் பாதிக்க வேண்டும். அதாவது விண்மீன்களின் அருகாக வருகிற ஒளியின் பாதையில் விலகல் ஏற்பட வேண்டும் என்றும் அயன்ஸ்ரைன் கூறினார். அதாவது கதிரவன் போன்ற பாரமான விண்மீன்கள் வெளிநேரப் பரிமாணத்தில் ஏற்படுத்தும் வளைவுகளில்தான் ஒளியும் பயணப்பட்டு வரவேண்டும் என்பது அயன்ஸ்ரைனின் மறுகருத்தில்லா முடிவு. சடமும் சக்தியும் ஒன்றெனவாயின் இந்தப் பாதைவிலகலானது நிகழத்தான் வேண்டும் என்பது கட்டாயமாகின்றது என்பது இப்போது எங்களுக்கும் தெரிந்திருக்கின்றதல்லவா. கதிரவனின் அருகாக வருகின்ற, புவியினைப் பொறுத்தவரையில் கதிரவனின் பின்னால் உள்ள விண்மீன்களில் இருந்து வருகின்ற ஒளிக்கதிர்களில் கதிரவன் பாதை விலகலை ஏற்படுத்த வேண்டும். இவ்விதம் பாதை விலகல் ஏற்படுவதால், புவியில் இருப்பவர்களுக்கு அந்த விண்மீன் வேறோரு இடத்தில் இருப்பதாகத் தோன்ற வேண்டும்



என அயன்ஸ்ரைன் கூறினார். கூறியது மாத்திரமல்லாது, ஒளிக்கதிர்கள் கதிரவனுக்கு அண்மையாக வருகையில் எவ்வளவு கோணத்தினால் விலகும் என்பதையும் கணித்துக் கூறினார்.

# அருண்ஷாவின் பரத நாட்டிய அரங்கேற்றம்

செல்வி. அருண்ஷாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்ற செப்ரெம்பர் 15ஆம் திகதி U.K லண்டனில் லூசியம் புறோட்வே திரையரங்கில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. நடனக்குரு Smt. Geetha Sridhar அரங்கேற்ற நடனங்களை சிறப்பாக தொகுத்து வரிசைப்படுத்தியிருந்தார். பல்கலைக்கழக மாணவியான அருண்ஷா, ஒவ்வொரு நடனங்களிலும் தன் திறனை சிறப்பாக வெளிப்படுத்தி சபையினரின் கரகோசத்தையும் பெற்றார்.



வைத்திய நிபுணர், டாக்டர் நவரட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், தேசிய விருதுகளைப் பெற்ற சினிமா நடிகையான ‘கலைமாமணி’ சுகன்யா ரமேஸ் அவர்கள் பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டனர். செல்வி அருண்ஷா, திரு. திருமதி (டாக்டர்) கிருஷ்ணராஜா (U.K) அவர்களின் ஏக புத்திரியும், திரு. திருமதி மாயா கந்தையா அவர்களின் சிரேஷ்ட பேத்தியுமாவார்.


**JARVIS SPORTS CLUB**

சிறுவர்களுக்கான குளிர்கால உதை பந்தாட்ட பயிற்சி ஆரம்பம்
எல்லா வயதினரிற்கும் பயிற்சி ஆரம்பம்.
*Under 6, Under 8, Under 10, Under 12, Under 14*
இடம்: ***Albert Campbell*** (MCCOWAN & FINCH)
நேரம்: புதன்கிழமை 6:00***pm*** - 8:30***pm***

***416.450.5473 / 416.897.5318***


McChicken®
Meal
ONLY
$4.99
plus tax
4PM - 8PM
Get a McChicken® sandwich with a medium fries and a medium soft drink for only $4.99 (plus tax).
Offer available from November 18th to December 2nd at the
McDonald's® restaurant located at 7630 Markham Rd., Markham, Ontario.
Available only from 4 p.m to 8 p.m. Not valid with any other offer.
©2013 McDonald's. *Coca-Cola Ltd., used under license.
i'm lovin' it

TRIDEL
BUILT FOR LIFE

# OPEN HOUSE

November
16, 2013
Saturday
12:00 - 4:00pm



**Special Exclusive
VIP Price**

**Tridel Office
4800 Dufferin Street
Building B
Toronto ON.**

## HomeLife / GTA Realty Inc.
Brokerage*

HOMELIFE
HIGHER STANDARDS

## சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

**Contact: 416.321.6969**

*Independently Owned & Operated



TRIDEL
BUILT FOR LIFE

# OPEN HOUSE

## November 23, 2013

## Saturday 1:00pm - 5:00pm



**Exclusive Special Price**
**HomeLife GTA**
**Buyers**

**Concord Sales Office**
**23 Spadina Ave.**
**Toronto, ON**

## HomeLife / GTA Realty Inc.
**Brokerage***

HOMELIFE
HIGHER STANDARDS

## Contact: 416.321.6969

*Independently Owned & Operated

# 12 Years A Slave

தூறல்

வானரன்

சில வருடங்களுக்கு முன்னர் ஒகாயோ மாநிலத்தின் தலைநகரான கொலம்பசில் உள்ள அரும்பொருட் காட்சியகத்தில் கறுப்பினத்தவர்கள் பற்றிய காட்சியறையில் வீடொன்றில் கறுப்பின பெண்கள் மேலாடையின்றியிருப்பது பற்றி ஒரு பத்து வயது வெள்ளை இனச் சிறுவன் தனது தந்தையிடம் வினவினான். அதற்குத் தந்தை "அவர்கள் அப்போது நாகரிகமற்றிருந்தார்கள். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தார்கள்" என பதிலளிக்கின்றார். இது தான் இன்றைய அமெரிக்காவில் கறுப்பினத்தவர்கள் பற்றிய கருத்தியலாக சிறார்கள் மத்தியில் படிந்துள்ளது.

இவ்வருடம் ரொரண்ரோ சர்வதேசத் திரைப்படவிழாவில் 12 Years A Slave என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது. இதற்கு முன்பாக சில அடிமைகள் பற்றிய படங்களை பார்த்துள்ளேன். மிகக் குறிப்பாக ஸ்ரீபன் ஸ்பில்பேர்க்கின் (Steven Spielberg) 'Amistad' என்ற படம் அடிமை வியாபாரத்தின் கொடூரத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆபிரிக்க நாடான Sierra Leone இல் இருந்து அடிமைகள் கியுபாவிற்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள். La Amistad கப்பலில் பயணிக்கும் இவர்கள் ஆறு வாரங்களின் பின்னர் குடி, நீர் போதிய உணவின்றி அவதிப்படுகின்றார்கள். கரையொன்று தென்படுகின்றது. அப்பொழுது இக் கப்பலை அமெரிக்க இராணுவக் கப்பல் கைப்பற்றி கரைக்கு கொண்டு செல்கின்றது.

அதன் பின்னர் இவ் அடிமைகள் எவ்வாறு கொடூரமாக நடத்தப்படுகின்றார்கள் என்பதனையே இப்படம் பதிவு செய்துள்ளது. இவர்களை பொருட்களாகவே கருதினார்கள். அப்போதைய ஸ்பானிய அரசி இரண்டாம் ஸ்பெல்லா அமெரிக்க ஜனாதிபதியிடம் Martin Van Buren கப்பலுக்கும் அடிமைகளின் சந்தை விலைக்கும் (Market value of the slaves) நட்டஈடு கோரியிருந்தார். இப்படத்தை மீண்டும் பார்த்த போது இலங்கைப் போரால் அகதியாக பல நாடுகளுக்கு கப்பலில் செல்லும் தமிழர்கள் நினைவுக்கு வந்தார்கள். இவர்களும் பல்வேறு நாட்டு அரசுகளால் மிக மோசமாகவே நடத்தப்படுகின்றார்கள்.



1800களின் ஆரம்பத்தில் இளம் வயது (20) ஆரோக்கியமான இளைஞனின் விலை 333இல் இருந்து 500 டொலர்களாக இருந்தது. இது பின்னர் 1849ல் 700-800 டொலர்கள் வரை உயர்ந்திருந்தது. பெண்களுக்கும், தொழிற்திறன் உள்ளோருக்கும், சிறுவர்களுக்கும் என தனித்தனி விலைகள் இருந்தன. இவ் அடிமை வியாபாரம் அன்று அமெரிக்காவில் முக்கிய வியாபாரமாக திகழ்ந்தது. அடிமை வாழ்வை பதிவு செய்த வேறு சில படங்கள் இவை. Beloved (1998,) Manderlay (2005), Django Unchained (2012), Tula (2013), Mandingo (1975), Sankofa (1993), Glory (1989) இவற்றுடன் கடந்த வருடம் வெளியான லிங்கனையும் உள்ளடக்கலாம்.

இவ்வரிசையில் வெளிவந்துள்ள மற்றொரு படமே 12 Years A Slave. இப்படம் உலகின் மிக முக்கிய திரைப்பட விழாக்கள் வரிசையில் உள்ள ரொரண்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் 'மக்கள் தேர்வு' சிறந்த திரைப்பட விருதைப் பெற்றது. இவ் விருதைப் பெற்ற The King's Speech, Slumdog Millionaire ஆகிய படங்கள் ஒஸ்காரின் சிறந்த படத்துக்கான விருதைப் பெற்றன. எனவே இப்படமும் ஒஸ்காரின் சிறந்த பட விருதைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Solomon Northup ன் 12 Years A Slave என்ற வாழ்க்கை வரலாறே இப்படம். சொலமன் எழுத படிக்கத் தெரியாதவர்.

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
இசை: இமான், ஏமாற்றவில்லை. ஷோபியின் நடன அமைப்பு எல்லா பாடல்களிலுமே அசத்தியிருக்கிறது. வைரமுத்துவின் வரிக-ளில் ‘ஒத்தக்கடை ‘ஒத்தக்கடை மச்சான்’ பாடல் கேட்கலாம். மதியின் ஒளிப்பதிவில் பாடல் கட்சிகள் மேலும் உயிர் பெற்றுள்ளன. இயக்கம்: சுசீந்திரன், நேராக செல்லாமல் திரைக்கதையை பிய்த்து பிய்த்து கொடுத்திருக்கிறார் என்றாலும் அதுவே சுவாரசியம். ஒரு பக்கம் சிம்மக்கல் ரவியின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லியபடியே, இன்னொரு பக்கம் விஷாலின் குடும்பம், அவரது காதல், வளர்ச்சி பற்றியும் ஒன்றுக்கொன்று தொடாமல் கொண்டு போயிருக்கிறார். விஷாலின் கல்யாணப் பேச்சு நடக்கும் சமயமெல்லாம், வில்லன் மறுபுறத்தில் படுகொலைகளை நடத்திக் கொண்டேயிருக்கும் காட்சிகள் வருகிறது. மிகச் சிறப்பான இயக்கம். துணக்கதைகள்

விளம்பரம் பத்திரிகையை
இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு
www.vlambaram.com /
www.tamilvanakkam.com



# முருகன்

முருகனின் அழகு அதியசமானது, அற்புதமானது. அதனை வலிந்திழுக்கும் வனப்பு எனலாம். எனவேதான் அந்த அழகை அள்ளிப் பருகுதற்கு இரு கண்கள் போதாது என்று கழிவிரக்கம் கொள்கின்றார் அருணைப்பெருமான். இதுதான் அப்பாடல்.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற் பொழிற் செங்கோடனை சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண்படைத்திலனே அந்நான் முகனே.

முருகனை நினைந்து உருகிவழிபடுவர் மருள் நீங்கப் பெற்று அருள் வெள்ளத்துள் திளைப்பர். கந்தப்பெருமானது கழலினை விளிக்கும், முருகா எனும் நாமம் மொழிக்கும் பன்னிரு புயங்கள் பழிபாவங்கட்கும், வேலும் மயிலும் தனிவழிக்கும் துணையாக நின்று அருள் புரிவனவாகும். அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருகன் என்றார் நக்கீரர். எனவே முருகா என்ற சொல்லுக்கு ஒரு மந்திர சக்தி உள்ளது. இறைவனது கழலினை கண்டு உவக்கும் போது களிபேருவகை ஏற்படுகின்றது. கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே என்றார் மணிவாசகர். நாம சங்கீர்த்தனம் செய்து தூய்மையுடன் மனம் ஒன்றி வழிபட்டால் கடவுளின் கழலிணை கடாட்சத்தை பெறலாம். முன்பு செய்த பழிக்கு துணைவருவன முருகனின் பன்னிரு புயங்களுமாகும். தனிவழி தனித்து துணையின்றிச் செல்லும் வழிக்கு உதவுவன வேலும் மயிலுமேயாகும். தனிவழி என்பது உற்றார் உறவினர் அனைவரும் கைவிட மெய்விட்டு கூற்றுவன் பின் செல்லும் வழியெனக் கொள்வது மிகவும் பொருந்தும்.



விழிக்குத்துணை திருமென்மலர்பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணையவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

முருகன் அவதாரத்தினால் கடல் அழுதது. குன்று அழுதது. சூரன் அழுதான். ஆனால் அமரர் ஆனந்தித்தனர். அடியவர் அகமகிழ்ந்தனர். முருகனது வேலின் வெம்மையும் தாளின் செம்மையுமே இதற்கு காரணமாகும்.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரம் தோன்றில் வேல் தோன்றும்
நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்

வேல் என்பது ஞானமாகும். வேலின் அடிப்பகுதி நீண்டும் நடுப்பகுதி அகன்றும் நுனிப்பகுதி கூர்ந்தும் காணப்படும். ஞானமும் ஆழந்தும் அகன்றும் நுணகியுமிருக்கும். அது வினையாகிய மலையை எளிதில் துகள்படுத்த வல்லது. வினையோடவிடுங்கதிர்வேல் மறவன் கந்தனாகும். அத்தகைய வேலை வேளைதோறும் வணங்குவதையே வேலையாகக் கொண்டால் சூழும் வினையகற்றி வாழும்வகை அருள்வான் வடிவேலன். வேற்படையை நினைப்பவர்க்கு அகந்தேவினைப்பதையும் புறத்தே முனைப்பகையும் வேருடன் அழியும்.



நா. க. சிவராமலிங்கம்

# தமிழே! ஏன் அழுகிறாய்?



என்தன் அன்புத் தமிழ்த்தாயே!
ஏன்தான் கண்கள் கலங்குகிறாய்?
உன்தன் குறையைச் சொல்வாயா?
உனது துயரைப் பகிர்வாயா?

எடுப்பார் கையின் பிள்ளைபோல்
இன்றேன் தமிழே நீயானாய்?
தடுப்பார் இன்றித் தவிக்கின்ற
தமிழே! அதற்கா அழுகின்றாய்?

அப்பா விகளை ஏமாற்ற
அழகு தமிழை பயன்படுத்தும்
அப்பா விகளை நினைத்தாநீ
அமைதி யாக அழுகின்றாய்?

தலைவ னாக நினைப்பவனும்
தன்னை வளர்க்க நினைப்பவனும்
விலைபே சியுனை விற்பதனால்
வேதனைப் பட்டா அழுகின்றாய்?

கூடி இனத்தை விற்பவர்கள்
கூடி விட்டார் எனப்பயந்தா
வாடிக் கலங்கி நிற்கின்றாய்?
வருந்தித் தனியே அழுகின்றாய்?

தம்மை இழந்து இனத்துக்காய்ச்
சகலமும் இழந்த வீரர்கள்
எம்மில் யாரும் இல்லையென்றா
ஏங்கிக் கண்ணீர் வடிக்கின்றாய்?

நெஞ்சம் திறந்து உனக்காக
நேர்மை யோடு உழைப்போர்க்குப்
பஞ்சம் வந்த நிலைகண்டா
பதைத்து மெதுவாய் அழுகின்றாய்?

'கதிரைக் காக அடிபட்டுக்
காட்டிக் கொடுப்போர் மலிந்தது என்
விதியோ' என்று மனம்நொந்தா
வேதனைப் பட்டு அழுகின்றாய்?

'எதிரி அழிக்க முன்னென்னை
என்பிள் ளைகளே அழிக்கின்ற
கதிநேர்ந் திடுமோ' எனக்கென்றா
கண்ணீர் சிந்தி அழுகின்றாய்?

ஒற்றுமை தொலைத்த இனமாக
ஒருவரை ஒருவர் நம்பாத
சிற்றின மாகத் தமிழரினம்
சிதைந்தது என்றா அழுகின்றாய்?

தாயை விற்றுப் பிழைக்கின்ற
தரங்கெட் டவர்கள் வெகுவிரைவில்
வாயை மூடி மௌனிப்பர்
வாட்டம் வேண்டாம் சிரிதாயே!

காலம் மாறும் பொறுதாயே!
கண்ணீர் துடைத்து உன்மௌன
ஓலம் போக்கக் கைகோர்ப்போம்!
ஒருதரம் இப்போ சிரிதாயே!

*- சபா. அருள்சுப்பிரமணியம்.*

# கனவுகள்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

பேராதனை
மாசி 16, 1976

அன்புள்ள அப்பா, அம்மா, அக்காக்களுக்கு!

நான் நலமாக இருக்கின்றேன். அது போல் நீங்களும் இருக்க இறைவனை வேண்டுகின் றேன். எனக்கு வகுப்புகள் நேற்று தொடங்கி விட்டது. எனது அறை நண்பனாக பெரேரா என்ற சிங்கள மாணவன் இருக்கின்றார். மிகவும் நல்லவர். என்னுடனே தான் இருப்பார். முதல் நாள் வகுப்புக்கு போகும் போது நிறையவே உதவி செய்தவர் எனக்கு இந்த சூழல் புதியது தானே, போகப் போக பழகிவிடும்.

அப்பா! எப்படி இருக்கிறீங்க? அப்பா நான் நீங்கள் விரும்பும் பிள்ளையாக வருவனப்பா எனக்கு தெரியும் நம்மட ஊரில் உங்களுக்கு இருக்கும் மரியாதை, அதுக்கு பங்கம் விளைவிக்கும் விதமாக நடக்கமாட்டேனப்பா. அப்பா எனக்கு சரியான வருத்தம், நீங்கள் இன்னமும் எங்களுக்காக உழைப்பது. என் படிப்பு முடிந்ததும் நம் வாழ்க்கை மாறிவிடும் அப்பா. கவலைப்படதீங்க நான் அடிக்கடி கடிதம் போடுவன்.

அம்மா எப்படியம்மா இருக்கிறீங்க? உங்களைப்பிரியும் போது எனக்கு அந்த பிரிவுத்துயர் தெரியவில்லை, ஆனால் இப்போது இந்த தனிமை எனக்கு ஒரு விதமான வருத்தத்தை தருகின்றது. எனக்கு கிடைத்திருக்கிற றூம் நண்பர் மிகவும் நல்லவரம்மா.. நீங்கள் கவலைப்பட வேண்டாம். என்னம்மா.

ஹாய் நிலாக்கா எப்படி இருக்கிறீங்க? என்ர அக்காவோட சப்போட்டை என்னால என்றுமே மறக்கமுடியாது. இந்தத்தம்பி உங்களை-யெல்லாம் நிட்சியம் சந்தோசமாக வைச்சிருப் பன் கவலைப்படாதீங்க அக்கா. என்னவாம் என்ர நண்பர்கள் சரவணனும், சிவாவும். அவங்ககிட்ட சுகம் கேட்டதாக கூறவும்.

ஹலோ கனியக்கா எப்படி உங்கட நண்பி களோட அரட்டை போகுது. அம்மாவுக்கு உதவிகள் செய்து கொடுக்கவும். நான் இல்லாதது உனக்கு தான் வசதி, அம்மாவை ஏமாற்றி உடுப்புகள் வேண்டுவாய். என்னவாம் உன்ர நண்பி சாந்தி?

நான் சுகம் கேட்டதாக சொல்லவும். நமது உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் சுகம் கேட்டதாக கூறவும். வேறு என்ன பதில் போடவும்.

அன்புடன்
கபிலன்

கடிதத்தை உடனே போடவேண்டுமென்று பெரேராவுக்கு சொன்னான், அதற்கு பெரேராவும் தானும் வருவதாக சொல்லி கபிலனுடன் சென்றான். இருவரும் தபால் கந்தோர் வரை பல விடையங்களை உரையாடிக் கொண்டு போனார்கள். பெரோவின் பொது அறிவை அறிந்து வியந்தான். அப்போது தான் எண்ணிக் கொண்டான் தான் வாசித்ததின் பயனை. இல்லையென்றால் பெரேரா தன்னை பொது அறிவில்லாதவன் என்று நினைத்திப்பான்.

வள்ளி விடிய காலை 5 மணிக்கெல்லாம் எழுந்திட்டா. எழுந்தவவின் மனதில் மகன் கபிலனின் நினைவு வந்தது, என்ர புள்ள புது இடம், சிங்களம் தெரியாது என்ன பாடுபடுகுதோ என தனக்குள்ளேயே கதைத்துக் கொண்டிருந்தவன் மனதில் தன் மகன் டாக்ராக வந்து அந்த ஊரில் தன் மக்களுக்கு சேவை செய்வதை எண்ணிப் பார்த்துக் கொண்டு இருந்தவவின் பின்னால் வந்த கனிமொழி அம்மா என கட்டிப் பிடித்ததும், தன் கனவு கலைந்து விட்டுதே என்ற ஆதங்கத்தில் இவ ஒருத்தி நேரம் தெரியாமல் வந்து விளையாடுவா, போடி அங்கால என்று மகளின் மேல் கடிந்து கொண்டா. என்னம்மா என்னோட கோபிக்கி றாய் என மகள் கேட்டதும் தான் தன் கோபத்தை உணர்ந்த வள்ளி இல்லையம்மா தம்பியபற்றி சோசிச்சண்டு இருந்தனான், அவனட்ட இருந்து ஒரு கடிதமும் இன்னும் வரேல்ல அதுதான் என்று இழுத்த அம்மாவை, அம்மா நீ ஒண்டுக்கும் பயப்படாத கபிலன் கெட்டிக்காறன், அவன் நல்லா இருப்பான் என்று தாயை தேற்றினாள்.

வாசலில் மணிச்சத்தம் கேட்டு வள்ளி குசுனிக்குள் இருந்து கத்தினா, புள்ள கனி பார் வாசலில தபால்காரர் மணிச்சத்தம் கேக்கிற போல இருக்கு, உடனே கனி வாசலைத்தேடி ஓடினாள். வாசலில் தபால்கார அண்ணே கடிதத்தை நீட்டினார். அம்மா... தம்பியிட்ட இருந்து தான் கடிதம் வந்திருக்கு எண்டு கத்திக்கொண்டு தின்னைக்கு வந்தாள். தாயும் அடுப்படி யிலிருந்து வந்து புள்ள உடைச்சு படியம்மா எண்டதும் கடிதத்தை உடைத்து படித்தாள். எல்லோர் மனமும் மகிழ்ச்சியில் திழைத்தது. நிலா சொன்னாள் கனி பார்த்தியா தம்பியிட எழுத்து முறையை. பொதுவாக கடிதம் என்பது எல்லோரையும் ஒன்றாக இணைத்து தான் எழுதுவது. கபிலன் எல்லோரையும் தனித்தனியாக பிரித்து அவர்கள் பற்றிய விடையங்களை பகிர்ந்துள்ளமை என்னைக் கவர்ந்துள்ளது. அதுபோல் கபிலனின் எழுத்துக்கள் முட்டை, முட்டையாக அச்சடித் ததை போல் இருக்கிறது என்று புகழ்ந்தாள் நிலா. சில மணித்தியாலங்கள் அங்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி காணப்பட்டது.

எத்தனை எத்தனை யுகங்கள், இன்பமாக, துன்பமாக மாறி மாறி வாழ்க்கையின் மாற்றங்களில். இரண்டாம் ஆண்டு பரீட்சையை முடித்துக்கொண்டு கபிலன் வீட்டுக்கு வந்திருந்தான். வீடே அமைதியாக இருப்பது போல் தெரிந்தது. அறிமுகம் இல்லாத ஒருவர் வீட்டுக்குள் இருந்து வருவதும், அறைக்குள் போவதுமாக இருப்பதனை கண்ட கபிலனுக்கு யார் இவர்? இவர் எங்கட வீட்டில என்ன செய்கிறார்? எல்லோரும் ஒன்றும் பேசாமல் இருக்கிறார் களே, என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த கபிலனுக்கு தேனீர் கொண்டு வந்தாள் கனிமொழி. வந்தவ என்னடா கபிலன் பல்லு விளக்கிற்றியா? என கேட்டுகொண்டு வந்தா, அக்கா இஞ்ச வா என தன் அறைக்குள் இழுத்துக்கொண்டு போனவன், யாரு ஒருத்தர் அக்காட அறைக்குள்ள இருந்து வாறர், என்னைப் பார்க்கிறேர் போறேர் என்று பெரிய சத்தமாக கேட்டவன்ர வாயை பொத்திய கனிமொழி, டே அது அக்காட அத்தான்டா என்றாள். ஒன்றும் புரியாமல் முளித்தவனை பார்த்து சொன்னாள் அக்காவுக்கு கலியாணம் ஆச்சுதெண்டு.

அதைக்கேட்டதும் ஓவென கத்திய கபிலனின் சத்தம் கேட்டு வீட்டின் ஒவ்வொரு பகுதிகளில் நின்ற அப்பா, அம்மா, அக்கா, அத்தான் எல்லோரும் என்னாச்சு என்று ஒரே குரலில் கேட்டுக்கொண்டு கபிலனின் அறைக்குள் வந்தனர். வள்ளி, ராசா கபிலன் என்னாச்சு எனக்கேட்டுக்கொண்டு கிட்ட வந்தா, கபிலன் தொடர்ந்து கத்தினான். கூடப் பிறந்த அக்காவின் திருமணத்திற்கே எனக்கு சொல்லவில்லை என எண்ணி எண்ணி குழந்தை போல் அழுதான். கபிலன்... என்னடா சின்ன பிள்ளை போல அழகிறாய் என அப்பா அதட்ட அழுகையை நிற்பாட்டினான். அப்பாவே நிலமையை புரிந்து கொண்டவராக விசயத்தை சொன்னார். திடீரென்று நல்ல இடத்து சம்மந்தம் வந்தது. அப்ப உனக்கு பரீட்சை நடப்பதாக அறிஞ்சன் அது தான் ஏன் உன்ர படிப்பை குழப்ப வேணாமெண்டு சொல்லேல்ல என்றார் என்ன செய்ய முடியும் அப்பா எப்போதும் இப்படித்தான் என்றவன மௌனமாகிப்போனவன்.

நாட்கள் பல பரிமாணங்களை பகிர்ந்து கொண்டு வருடங்களாக மாறியதை கபிலனும், பெரேராவும் தங்கள் படிப்பின் இறுதி பரீட்சையை முடித்துக்கொண்டு தங்களின் அறைக்கு போகும் வழியில் கடந்த ஐந்து வருடத்தில் நிகழ்ந்த சம்பங்கள் யாவும் இருவரின் எண்ணங்களில் மறு ஒளிபரப்பாகியது. துக்கம் நெஞ்சை அடைப்பது போன்று தோன்றியது. இருவரின் நடையில் ஒரு வகையான சோர்வும், என்றுமில்லாதவாறு மௌனம் அவர்களின் நடைபாதை எங்கும் தொடர்ந்தது. நட்பின் இலக்கணங்களாக கடந்த ஐந்து ஆண்டுகள். எத்தனை சோதனைகள், எத்தனை தடுமாற்றங்கள் கபிலன் இல்லையென்றால் என் வாழ்க்கை எப்படியெல்லாம் சீரழிந்திருக்கும். காதல் போதையில் சிக்குண்டு படிப்பில் கவனம் செலுத்தாமல் இருந்து என்னை ஒரு தாயைப்போல அரவணைத்து வழிமாற்றி இந்த நிலைக்கு கொண்டு வந்த அந்த நண்பனை பிரியப் போகின்ற நாட்கள் நெருங்குவது பெரேரா மனதுக்கு தாங்க முடியாததாக இருந்தது.

மறுபக்கம் என் கனவு, என் இலட்சியம் யாவும் நிறைவேறும் நாள் நெருங்குகின்ற மகிழ்ச்சிக்கு காரணம் என் நண்பன் பெரேரா தான். 1977ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் நிட்சயமாக நான் செத்திருக்க வேண்டியவன். எத்தனை பேர் இன்று எம்மோடு இல்லை. அரச காடையர்களின் இனவெறி தாக்குதலில் கொல்லப்பட்ட, கற்பழிக்கப்பட்ட தமிழ் பெண்கள் எத்தனை... எத்தனை. இந்த நேரத்தில்தான் செத்தாலும் உன்னை சாக விட மாட்டேன் என்று சொல்லி என்னைக் காப்பாற்றுவதற்காக பெரேரா பட்ட துன்பங்களை எண்ணிப்பார்த்தான் கபிலன். எப்படி மறக்க முடியும். அழகழகான பல நாட்களில் இப்படி மறக்க முடியாத கறுப்பு நாட்களும் இருப்பதை இருவரும் தங்கள் மனத் தொலைக்காட்சியில் மறு ஒளிபரப்பாகி கொண்டிருந்தபோது, அறைக்கதவை திறந்து கொண்டு உள் வர தொலைபேசி மணி ஒலித்தது. ஹலோ நான் பெரேரா பேசுகின்றேன் என சிங்ளத்தில் சொல்லவும் மறுமனையில் நான் கனிமொழி, பேசுகிறன் தம்பி கபிலனோடு பேசலாமா? என்று தமிழில் கேட்க பொறுங்கோ அக்கா கொடுக்கிறன் எண்டு சொல்லி கொடுத்தான். கபிலன் ஹலோ சொல்ல தம்பி அப்பாவும், அம்மாவும் புறப்பட்டிட்டினம் என்றா. ஓகே அக்கா நான் விடிய போய் கூட்டிவாறன் எண்டு சொல்லி முடித்தான். தொலைபேசியை வைத்து விட்டு திரும்பியவனின் கண்களில் அந்தப் படம். அந்தப் படத்தின் மீது கண்கள் இரண்டும் அசையாமல் நின்றன. அந்த நொடிப்பொழுது கபிலனின் மனம் அந்த துன்பமான நாட்களை அசைபோட்டது.

பெரேரா காதல் தோல்வியால் மனமுடைந்து தன் வாழ்வே முடிந்து விட்டதென்ற முட்டாள் தனமான எண்ணத்தில் எதிலும் பிடிப்பில்லா மல் சாவதற்கே துணிந்திருந்தான். எப்படி இந்த சூழலிருந்து காப்பாற்ற போகிறேன் என்று தெரியாமல் கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தநேரம். காதல் இவ்வளவு வலியை ஏற்படுத்துமா? பெண்கள் மென்மை யானவர்கள் என்கிறார்களே, ஒரு அப்பா வியை இவ்வளவு துன்பத்திற்கு ஆளாக்கி விட்டு ஒன்றுமே தெரியாதவள் போல இன்னொருத்தனோடு எப்படி உல்லாசமாக திரியமுடிகிறது என்றெல்லாம் எண்ணிக் கொண்டு, வேண்டாம்டா சாமி நமக்கிந்த காதலும், கத்தரிக்காயும் எண்டு இருந்தவனை தீடிரென வந்து சுற்றிய புயல் காற்றுத்தான் கலா.

சும்மாவா கண்ணதாசன் பாடி வைத்தார் மனமொரு குரங்கு மனித மனமொரு குரங்கு என்று. பெரேராவின் அனுபவம் எனக்கான நல்ல பாடமாக இருக்கும் எண்டு எண்ணிக் கொண்டிருந்த என் மனதுக்குள் கலா புரிந்த மாற்றங்கள் சொல்லிலடங்கா.... பெண்கள் மதுவை விட போதை தரக்கூடியவர்கள் என்பதை நண்பன் பெரேரா சொல்ல அலட்சியம் செய்த நானா இப்படி இருக்கிறேன் என்று தன்னையே கேள்வி மேல் கேள்வி கேட்டு... பல நாட்கள் கஸ்டப்பட்டு காதல் எனக்கு வேண்டாம் என்ற பலமான முடிவிற்கான காரணமாக அக்கா கனியை மனதில் நிலையாக நிறுத்தி கலாவிடமிருந்து விடுபட்டுக்கொண்டான். இருந்தும் கலாவின் நினைவு தன் மனதில் இருக்கிறது என்பதனை அந்தப் படம்



ஆசீர் அன்ரனி
ரொறொன்ரோ

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
SPECIAL CLASSES FOR
❖ PRE-UNIVERSITY
▪ MCAT EXAM
✚ IB & AP program
• SUMMER CLASSES
"July- August"
❖ REGULAR CLASSES
"Throughout the year"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# ஸ்ரீதர்

படத்தின் தொடக்கத்தில் கதையின் கதா-நாயகன் ஒரு வைத்தியசாலையில் இருப்பதை காண்கிறோம். அப்போது அவர் இரு பிள்ளைகள் விளையாடுவதை கண்டு தன் கதையை பற்றி யோசிக்கிறார். சிறுவனான ஸ்ரீதர், ஒரு முறை சிறுமியான ஸ்ரீதேவியின் பொம்மையை திருடுகிறான். அங்கு தொடங்குகிறது ஸ்ரீதரும் ஸ்ரீதேவியினதும் நட்பின் கதை. பள்ளிக் கூடத்தில் அவர்கள் போட்டியில் பங்குபற்றி வெல்லும் போது நண்பர்களாகின்றார்கள்.

20 வருடத்திற்கு பின்னர் இருவரும் இன்னும் நல்ல நண்பர்களாக இருக்கின்றார்கள். வெளியூரிற்கு சென்று படிப்பதை விட Guitar விரும்பி படித்த ஸ்ரீதர் மீது அவரது தந்தை கோபமாக இருக்கிறார். எனவே ஸ்ரீதருக்கு அவர் விரும்பிய துறையில் வேலை தேடுவதற்காக இரு நண்பர்களும் சேர்ந்து திரிகின்றார்கள். அப்போது ஸ்ரீதரின் காதல் கதையும் இன்னொரு பெண்ணுடன் ஆரம்பிக்கிறது.

ஸ்ரீதர் காதலியுடன் நேரம் செலுத்துவதால் ஸ்ரீதேவி தன்னை மறந்துவிட்டதாக நினைக்கிறார். அப்படி ஒன்றுமில்லை என்று ஸ்ரீதர் கூறும்போது ஸ்ரீதேவியை கல்யாணம் செய்ய போகிறவரும் அங்கு எதிர்பாராமல்



வந்து சேருகிறார். இந்த நேரத்தில் ஸ்ரீதருக்கு இசைக்குழு (Band) ஒன்றில் வேலை கிடைத்து போட்டி ஒன்றில் பங்குபெற செல்கிறார். ஸ்ரீதரை ஊக்குவிக்க அவருடன் ஸ்ரீதேவியும் அவர்கள் இருவரின் காதலர்களும் செல்கிறார்கள். அப்போது அவர்கள் இருவரும் ஸ்ரீதேவியும் ஸ்ரீதரும் பழகுவதை கண்டு, அவர்கள் நண்பர்களை விட காதலர்கள் போல் நடக்கிறார்கள் என்று எண்ணுகிறார்கள். இதனால் அவர்களுக்குள் சண்டை நடைபெறுகிறது.

போட்டியை வென்று விட்டு திரும்பிய இரு நண்பர்களது பெற்றோர்களும் அவர்கள் காதலர்கள் போல் தான் நடந்து கொள்கிறார்கள் என்றும், அதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் காதலுக்கும், நட்பிற்கும் வித்தியாசம் உண்டு என்று ஸ்ரீதர் அவர்களது பெற்றோர்களுக்கு உணர்த்துகிறார். இதை உறுதிப்படுத்த ஸ்ரீதர் ஸ்ரீதேவியை கல்யாணம் செய்யப்போகிறவரிடம் இனிமேல் ஸ்ரீதேவியை சந்திக்கமாட்டேன் என்கிறார். கடைசியில் வைத்தியசாலையில் ஸ்ரீதேவிக்கு 3 வருடத்திற்கு பின்னர் பிள்ளை பிறக்கும் போதுதான் அவரின் கணவர் இரு நண்பர்களையும் சேர்த்து வைக்கிறார். திருவள்ளுவர் 'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்று உடுப்பு களரும் போது கை உதவுவது போல்தான் நட்பு இருக்க வேண்டும் என்று கூறியது போல் இவர்களது நட்பு இருந்தது.



ஞா. ஆரணி
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# Education

## Review Tutorials 13-21

### ➢ CHEMISTRY GR 12 & IB

(1)(i) The data below shows the results of three experiments carried out to find out the rates of the following reaction. 2 NO (g) + $Cl_2$ (g) → 2NOCl(g)

| Expt | initial con (mol/L) [NO] | [$Cl_2$] | Initial rate of Reaction (mol/Ls) |
|---|---|---|---|
| 1 | 0.02 | 0.04 | $3.10 \times 10^{-5}$ |
| 2 | 0.02 | 0.08 | $6.10 \times 10^{-5}$ |
| 3 | 0.04 | 0.12 | $3.61 \times 10^{-4}$ |

Rate = k $[NO]^x [Cl_2]^y$

(a) Determine $x$ and y, and write the rate law equation for the reaction.

(b) Calculate the value of the rate constant, with the appropriate units.

(ii) Determine the standard enthalpy change for the following reaction.
2 NO (g) + $Cl_2$ (g) → 2NOCl(g) ΔH
Heat of formation of NO and NOCl are 90.25KJ/mol and 51.71kJ/mol respectively.

(iii) Describe and explain the effect of increasing temperature on the spontaneity of the reaction.

### ➢ PHYSICS (GR 12)

A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction ( horizontally) with the speed of 52m/s. If the ball leaves the bat with a speed of 60m/s at an upward angle of 25° from the horizontal, calculate the average force exerted on the ball. Collision lasts for 1.2ms

### ➢ FUNCTIONS (GR 11)

A company manufactures toy-cars. The company uses the function $P_{(t)} = -25t^2 + 250t - 400$ to model its profit. $P_{(t)}$= profit in thousands, t = the number of toy-cars sold in tens of thousands. Determine least number of toy-cars that should be sold to breakeven.

### ➢ ADV. FUNCTIONS(GR 12)

(i)

Prove, $\dfrac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

(ii)

$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a\left(\dfrac{x^2}{y^3}\right)$

## Answer Key : 13-20

### ➢ CHEMISTRY 11

(A) Solubility of $NH_4Cl$ at 70°C and 50°C are 70g and 50g respectively.

Mass of salt in 500g saturated solution at70°C;

= (70/170) X 500 g = 206g

Mass of salt in 500g saturated solution 50°C

= (50/150) X 500 g = 167g.

Mass of salt deposit =( 206-167)g = 39g

(B) $Na^+$ and $NO_3^-$ each 0.001 moles

(C) $Na^+$ = 0.013 mol/L and $NO_3^-$ = 0.057mol/L

**GR 12** X + Y → C+ P (slow)
C + Y → Q (fast)

### ➢ POLYNOMIAL FUNCTION (Gr 12)

$f_{(x)}= ax^3 + bx^2 + cx + d$

$a+b+c+d = -7$ .........(1)

$8a+4b+2c+d = -8a+4b-2c+d$ ....(2)

$4a+c = 0$ ....(2)

The graph passes through origin, d= 0 ..............(3)

The graph passes through (-1,17)
$-a+b-c+d = 17$ .......(4)

Solve for a, b, c.

$f_{(x)}= 4x^3 + 5x^2 - 16x$

### ➢ FUNCTION (Gr 11)

$k < 3$

### ➢ PHYSICS (GR12)

Initial velocity = 0 each case. Lets take the final velocities of P and Q are V and 2V and accelerations are $a_p$ and $a_q$; use $v_f^2 = v_i^2 + 2a\Delta d$ and find out $a_P$ & $a_Q$

Results $a_P = 4a_Q$ ; FOB for child P,
F net = m $a_P$ = m g sin 32; $a_P$ = g sin 32;
Therefore, $a_q$= g sin 32/4

FOB for Q results, $F_N = m_g \cos 32$

$\frac{mg \sin 32}{4} = mg \sin 32 - \mu_k m_g \cos 32$;

$\frac{\sin 32}{4} = \sin 32 - \mu_k \cos 32$

$\mu_k = 0.37$

*Answer key 13-21, - next issue*
Contact: 647 341 3975
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# கனவுகள்

32ஆம் பக்கத்தொடர்ச்சி

தோற்றிவிட்டதனை ஏற்றுக்கொண்டான். ஒன்றுமே நிகழாத எனக்கே இப்படி யென்றால்.. பாவம் பெரேரா என்று பெருமூச்சு விட்டு, எங்கோ இருக்கும் இன்னொருவனின் சொந்தக்காரியை நான் வைத்திருப்பதின் தவறை உணர்ந்து கலாவின் படத்தை கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டான்.

இருவரின் பெற்றோரும் ஒரே புகையிரதத்தில் வந்து சேர்ந்தனர். எப்படி முதல் முதலாக கபிலனும், பெரேராவும் சந்தித்தது போல் பெற்றோரின் நிலமையும் அமைந்தது. இருந்தும் பெரேரா தமிழிலும், கபிலன் சிங்களத்திலும் கதைத்தது, அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தங்களைப்போல் அன்பாக பழகியமை பெருமையாக இருந்தது. மறுநாள் மாலை 5மணி பேராதனை வளாகம் விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கும் மாணவர்கள், அழகழகான உடைகளுடனும், மகிழ்ச்சியோடும் காணப்பட்டனர். கபிலனின் அப்பா வேட்டியும் சேட்டும். அம்மா சாறியுடனும் அதேபோல் பெரேராவின் பெற்றோரும் தங்கள் கலாச்சாரத்தை பிரதிபலிப்பது போல் அழகான உடையணிந்து விழா மண்டபத்துக்குள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தனர். மண்டபத்தின் தோற்றமே செல்லையாவுக்கு புது உணர்வுகளை தோற்றுவித்தது. இதனால்தான் கற்றோர்க்கு செல்லுமிடமெல்லாம் சிறப்பெண்டனரோ. என் மகன்… என் மகன்.. என வாய் ஏதேதோ உச்சரித்தது. கபிலனை நினைத்து பெரிமிதம் கொண்டார். வள்ளி தன் நிலை உணர்ந்தவளாக "பெற்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோரன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கொப்ப தன் மகன் கபிலனால் பெருமை கண்டார்.

விழாவின் பிரதம அதீதியாக கல்வி அமைச்சர் கலந்துகொண்டார். விழா ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தொகுத்து வழங்கப்பட்டதனால் செல்லையாவுக்கும், வள்ளிக்கும் விளங்கவில்லை. இருந்தபோதிலும் அந்த அரங்கமே குதூகலத்தில் துள்ளியது. ஆடல், பாடல் என மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மூன்று மொழிகளில் எல்லோரையும் கவர்ந்தது. மாணவர்களின் பட்டமளிப்பு நிகழ்ச்சி ஆரம்பமாகியது. கபிலனுக்கு முன் பெரேராவுக்கு பட்டமளிப்பு நடைபெற்றது. பெரேரா தனதுரையில் நான் இன்று டாக்டராக வந்தமைக்கான முழு காரணமும் என் பெற்றோரையே சேரும் இந்த வேளையில் அவர்களுக்கு என் நன்றிகள். அதேபோன்று என் பாதையை வழிநடத்தி இன்றைய பட்டத்தை பெற வைத்த என் ஆருயிர் நண்பன் கபிலனுக்கும் நான் என்றும் நன்றி கூறவேண்டும். கபிலன் இல்லையென்றால் என் வாழ்க்கை எங்கோ தொலைந்திருக்கும் என்று கண்கள் கலங்க நன்றி கூறி தனதுரையினை நிறைவு செய்தார். மண்டபமெங்கும் கரவொலி சில விநாடிகள் தொடர்ந்தது.

அடுத்ததாக கபிலனை மேடைக்கு வருமாறு நிகழ்ச்சி தொகுப்பாளர் அழைத்ததும்… மேடைக்கு சென்றவ னுக்கு என்ன நடக்கிறதென்டே புரிந்து கொள்ள முடியவில்லை. தன்னை எங்கோ தொலைத்து விட்டது போல் உணர்வில் இருந்தவனின் செவிகளில் நிகழ்ச்சி தொகுப்பாளர் கபிலன் சில வார்த்தைகள் பேசுவார் என்ற அழைப்பின் ஒலி கேட்டு சுயநினைவுக்கு வந்தவன் ஒலிபெருக்கியை தேடி நடந்தான். எல்லோருக்கு மாலை வணக்கம் செலுத்தியவனின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவராமல், அவனையும் அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடியது. சில மணித்துளிகளில் தன்னை சுதாகரித்துக் கொண்டவன், கை குட்டையால் தன் கண்களை துடைத்துக்கொண்டு மீண்டும் ஒலி பெரிக்கி முன் வந்தான்.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்





PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்… போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனா பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

பிளெக் மஜிக் 3 நாட்களுக்குள்
அகற்றி பாதுகாப்பு கொடுக்கப்படும்.

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND ®

எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

# 12 Years...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

இவரது சுயசரிதத்தை இவர் கூற எழுதியவர் Glen Falls – நியுயோர்க்கைச் சேர்ந்த டேவிட் வில்சன் என்ற வெள்ளை இன வழக்கறிஞர். இதனால் இதன் உள்ளடக்கம் பற்றிய விமர்சகர்களின் கருத்துக்கள் இதன் நம்பகத்தன்மையை ஏற்றுக் கொண்டபோதும் முற்று முழுதாக சொலமனின் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படவில்லை என கருதுகின்றன. இச்சுயசரிதம் ஏற்கனவே 1984ல் Solomon Northup's Odyssey என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது. இதனை இயக்கியவர் Gordon Parks. இதில் சொலமனாக நடித்திருப்பவர் Avery Brooks. இப்படம் மிகப் பெரிய கவனத்தை ஈர்க்கவில்லை.

இம்முறை இப்படத்தை இயக்கியிருப்பவர் Steve McQueen. இவர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர். அடிமைகளைப் பற்றிய படங்களில் பெரும்பாலானவற்றை வெள்ளை இன இயக்குனர்களே இயக்கியுள்ளார்கள். விதிவிலக்காக 12 Years A Slave சுயசரிதத்தின் இரு படங்களையும் கறுப்பின இயக்குனர்களே இயக்கியுள்ளார்கள்.

1619ல் முதல் கறுப்பின அடிமை அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்டார். 188 வருடங்களின் பின்னரே அமெரிக்கா அடிமைகளை இறக்குமதி செய்வதை தடைசெய்தது. முதல் அடிமை வந்து 246 வருடங்களின் பின்னர் 1865ல் அடிமை முறை ஒழிப்பு சட்டமாக்கப்பட்டது. 1868ல் முன்னாள் அடிமைகளுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டது. சுமார் 250 வருடங்கள் கறுப்பின அடிமைகள் பல்வேறு சித்திரவதைகளையும் வன்முறைகளையும் எதிர்கொண்டு வாழ்ந்து வந்தனர். இந்த வரலாற்றின் ஒரு சிறு கல்லே 12 வருட அடிமை என்ற இப்படம்.

சொலமன் நோத்யப் 1808ல் ஒரு சுதந்திர பிரசையாகவே அமெரிக்காவில் பிறந்தார். இவரது தந்தை ஒரு முன்னாள் அடிமை. இளம் வயதில் தந்தைக்கு உதவியாக தோட்டங்களில் வேலை பார்த்தார். 1829 கிறிஸ்மஸ் அன்று அனி ஹம்படனை திருமணம் செய்து கொண்டார். அனி ஹம்படன் கறுப்பு, வெள்ளை, பூர்வீக இந்தியக் கலப்பைக் கொண்டிருந்தார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். இவர் பின்னாளில் சிறந்த பிடில் இசைக் கருவி வாசிக்கக் கூடியவராக தேர்ச்சி பெற்றிருந்தார். (திரைப்படத்தில் வயலின் வாசிப்பவராக காட்டப்படுகின்றார்). 1841ல் இருவர், இவருக்கு வோசிங்டனில் உள்ள இசைக் குழுவில் கலைஞராக இருப்பதற்கு அதிக பணம் கொடுப்பதாக கூறி வோசிங்டன் அழைத்துச் செல்கின்றனர். அங்கு இவரை அடிமையாக விற்றுவிடுகின்றனர். அதன் பின்னர் ஒரு ஏலத்தில் நியு ஓர்லன்ஸ்ல் உள்ள ஒரு முதலாளி இவரை வாங்குகின்றார். இதன் பின்னர் பல முதலாளிகளிடம் இவர் வேலை செய்கின்றார். இக்காலகட்டத்தில் இங்கு வேலைக்கு வரும் ஒரு வெள்ளை இன கனடியர் இவரது இருப்பையும் இடத்தையும் இவரது குடும்பத்துக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துகின்றார். இதன் பின்னர் அதிகாரிகள் இவரை மீட்கின்றனர். இவர் தன்னை கடத்தியவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். இவரால் வெற்றி பெற முடியவில்லை. இவர் 1863ல் இறந்ததாக நம்பப்படுகின்றது.

இப்படம் இவர் கடத்தப்பட்டதில் இருந்து விடுதலையடைந்த வரையிலான கால கட்டத்தை பதிவு செய்துள்ளது. இக்கால கட்டத்தில் இவருடன் இருந்த அடிமைகளை முதலாளிகள் செய்த சித்திரவதைகளை வலியுடன் வெளிப்படுத்தியுள்ளது. தாயிடமிருந்து பிள்ளையைப் பறித்து வேறு முதலாளிகளுக்கு விற்றல், பெண்களுடன் வன்புணர்வு கொள்ளல், கயிற்றில் கட்டி தூக்கிலிடுதல் போன்ற பயங்கரங்களையும் பதிவு செய்துள்ளது. சக அடிமையாக இருந்த பெண் தப்பி ஓட முயற்சித்ததாக கூறி அப்பெண்ணை நிர்வாணமாக்கி சவுக்கால் அடிக்கச் சொல்வார் முதலாளியம்மா. அப்பெண் நிர்வாணமாக்கப் பட்டு மரத்தை கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தார். அப்பெண்

முதல் இரண்டு நிலைகளையும் பின்வரும் காட்சிகளுக்கூடாக விளங்கிக் கொள்ளலாம். நூலாசிரியரின் நோக்கம் அடிமை ஒழிப்பு. இதனை கருத்தில் கொண்டு அடிமைகளின் நாளாந்த வாழ்வியலில் அவர்கள் சந்திக்கும் இயல்பான உள்மன உழைச்சல்களையும் தேவைகளையும் கூட அழகாக இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார். சொலமன் அடிமையாக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் பல அடிமைகளுடன் இரவில் தூங்குகின்றார். அப்பொழுது இவருக்கு அருகில் உறங்கும் பெண் இவருடன் உறவு கொள்கின்றாள். இவ்விடத்தில் இப் பெண்ணின் முகம் காட்டப்படவில்லை. உடல் அசைவுகள் மூலமே இயக்குனர் காட்சியை பதிவு செய்கின்றார். அடிமையாக இருந்த போதும்



மீது சவுக்கால் அடிக்குமாறு சொலமன் பணிக்கப்படுகின்றார். என்ன செய்வது? அடிக்கத்தானே செய்ய வேண்டும் சொலமனுக்கு ஒரு தடவை தண்டனை வழங்கப்பட்டு மரத்தில் கட்டி தூக்கப்படுகின்றார். கால்கள் நிலத்தை தொடாவிட்டால் உயிர் போய்விடும். அந்நிலையில் இப்பெண் சொலமனுக்கு தண்ணீர் வழங்குகின்றார். அதேபெண்ணை சொலமனே அடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார். சொலமன் வேலை செய்த இடங்களில் தனது திறமையால் முதலாளிகளுக்கு லாபம் அதிகமாகவும் வழிவகைகள் செய்துள்ளார். பருத்தித் தோட்டங்களில் வேலை செய்த காலங்களில் கடுமையாக வேலை வாங்கப்பட்டார்.

இப்படத்தை இயக்கிய Steve McQueen இதற்கு முன்பு 2008ல் Hunger படத்தை இயக்கியுள்ளார். இது வட அயர்லாந்தில் உண்ணாவிரதமிருந்து இறந்த Bobby Sands ன் போராட்டத்தை மையமாகக் கொண்டது. அரசியல் போராட்ட வரலாற்றை வெளிப்படுத்துவதில் திறமை கொண்ட இவரின் திரைமொழி இப்படத்திலும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இயக்குனர் மூன்று வெவ்வேறு நிலைகளில் அடிமை வாழ்வியலை வெளிப்படுத்தியுள்ளார். முதலாவது, அடிமை வாழ்வின் துன்பியல். இங்கு முதலாளிகளின் அக மனப்பிறழ்வை ஒரு மனநோய்க்கு ஒப்பானதாக வெளிப்படுத்துகின்றார். இரண்டாவது, அடிமைகளாக வாழும் கறுப்பினத்தவரின் இயல்பான மனோநிலை அன்றாட அக புறத்தேவைகள் அதனை அவர்கள் எவ்வாறு பூர்த்தி செய்தார்கள் என்பதனை பதிவு செய்துள்ளார். மூன்றாவது, புறம் சார்ந்தது. சமூகம், அரசு, மதம், அடிமைத்தனத்தின் மீது கொண்டுள்ள கருத்தியல் மீதான தனது கருத்தை முன் வைக்கின்றார்.

தனது உடலை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளாள் என இயக்குனர் இக்காட்சிக்கான விளக்கத்தை நியு யோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கான பேட்டியில் கூறுகின்றார். புணர்ந்து முடிந்தவுடன் வழமையான தனது நரக வாழ்வை நினைத்து அழுகின்றாள். சொலமனுக்கும் இரு பெண்களுடன் இக் காலகட்டத்தில் உறவுகள் ஏற்படுகின்றன. அடிமையாக வாழ்வோரின் அக வாழ்வியலையும் இங்கு இயக்குனர் வெளிப்படுத்தத் தவறவில்லை. (ஹரிசன் ஆன் ஜேக்கப் எழுதிய "Incidents in the Life of a Slave Girl" நூல் பெண்களின் அவலங்களை, வலிகளை கூறுகின்றது.) அநேகமான ஹொலிவூட் படங்களில் கறுப்பின ஆண்கள் முரட்டுத் தனம் நிறைந்தவர்களாக காட்டப்படுவார்கள். இப்படத்தில் சொலமன் ஒரு பொறுப்புள்ள, பாசமுள்ள தந்தையாக, கணவனாக அறிமுகப்படுத்தப்படுகின்றார். பின்னரும் இவர் ஒரு இரக்கமுள்ள, உணர்ச்சியான, துணிச்சலான மனிதனாக காட்டப்படுகின்றார். சொலமன் இயல்பாக Chiwetel Ejiofor நடித்துள்ளார்.

இப்படத்தில் வரும் ஒவ்வொரு அடிமைப் பாத்திரங்களும் தனித்தன்மை கொண்டவையாக உள்ளன. இது கறுப்பின மக்களின் ஆற்றலையும் சக்தியையும் வெளிப்படுத்துகின்றது. படத்தில் ஒரு சில இரக்கமுள்ள முதலாளிகளும் காட்டப்பட்ட போதும், அடிமைகள் கொடுமைப்படுத்தப்படும் பொழுது அங்கு நிற்கும் வெள்ளை இனத்தவர் அக் காட்சிகளை இரசிப்பவர்களாகவும், உணர்ச்சியற்றவர்களாகவும் வெளிப்படுத்தப்படுகின்றனர்.

மூன்றாவது நிலை இயக்குனரின் விமர்சனமாகவே வெளிப்படுகின்றது. இதே காலகட்டத்தில் ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டு வட அமெரிக்காவின் எல்லைப் புறங்களை நோக்கி தள்ளப்பட்ட முதன்மைக் குடிகளும், பூர்விக மக்களுமான செவ்விந்தியர் இப்படத்தில் ஒரு காட்சியில் வருகின்றனர்.. ஒரு காட்சியில் கறுப்பின அடிமைகளுடன் செவ்விந்தியர் நடனமாடுகின்றனர். அக் காட்சியே அவர்களும் கறுப்பினத்தவரும் ஒரே நிலையில் உள்ளனர் என்பதனை வெளிப்படுத்துகின்றது. அரசு கறுப்பினத்தவரையும் செவ்விந்தியரையும் அடிமைப்படுத்தியே வைத்துள்ளது. அரசு அடிமைகளுக்கெதிராகவே இக்காலகட்டத்தில் இயங்கி வந்துள்ளது. அடிமைகளை வைத்திருந்தோர் மீது அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிறிஸ்தவ மதத்துக்கும் முதலாளித்துவத்துக்குமான நெருக்கத்தையும் இப்படம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை பொதுவாக மதத்துக்கும் அடிமைத்தனத்துக்குமான நெருக்கமாகவே பார்க்க வேண்டும்.

இத்திரைப்படம் கடும் கோடை காலத்தில் படமாக்கப்பட்ட போதும் பெரும்பாலும் ஒளி குறைந்தே காணப்படுகின்றது. இயக்குனரின் உள்ளார்ந்த வெளிப்பாடாகவே இது வெளிப்படுகின்றது. அவரின் ஒரு விமர்சனமாகவும் ஒளிர்கின்றது. பெரும்பாலான கறுப்பின அடிமை பற்றிய படங்களில் ஒரு வெள்ளை இனத்தவரே வந்து கறுப்பினத்தவர்களை காப்பாற்றுவார். இப்படம் உண்மை சுயசரிதத்தை மையமாகக் கொண்டிருந்த போதிலும் இங்கும் அதுவே வெளிப்படுகின்றது.

இப்படம் இக்காலகட்டத்தில் மிக முக்கியமான படம். அமெரிக்க அதிபராக ஒரு கறுப்பினத்தவர் இருக்கின்ற போதும் இன்றும் கூட கறுப்பின மக்கள் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளனர். சிறைகளில் உள்ளோரில் 60 வீதமானோர் கறுப்பின மக்கள். அண்மைக் காலங்களில் கறுப்பின மக்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இன்றைய அமெரிக்காவை கட்டியெழுப்பியவர்களில் கறுப்பின மக்களின் பங்கு கணிசமானது. மீண்டும் ஒரு தடவை தாங்கள் வந்த பாதையை மீளப் பார்த்து மீண்டும் புத்துயிர்ச்சி பெற வேண்டும். இளம் சந்ததியினருக்கு இது ஒரு பாடமாகவும் அமையும். திரையரங்கில் எனக்கருகில் இருந்த வெள்ளை இனத்தவர்கள் சித்திரவதைக் காட்சிகளின் போது காணச் சகிக்காது கீழே பார்த்தவண்ணமிருந்தனர். ஆமேனியர்களை படுகொலை செய்த துருக்கியர் இன்றுவரை ஆமேனியர்களிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. இலங்கை அரசு தமிழ் மக்களிடம் எதுவும் கேட்கப் போவதில்லை. அமெரிக்கா ஒன்று மட்டும் செய்யும் ஒஸ்காரில் பல விருதுகளைக் கொடுக்கும். வலி நிறைந்த இவ்வரலாற்றை நாம் அனைவரும் சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயம் ஒரு தடவை பார்க்கவேண்டும்.


அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"
www.gtr24.com






இது எங்கள் தேசமென்று பாடலைப் பாடுங்கள்.
ஆனால் சந்திரபாபுவின் பாடல் வரிகள்
'ஒன்றுமே புரியலே என்னமோ நடக்குது'.

ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர்
செல்லம்மாவும் அந்தப் பாடலில் மெய் மறந்திருந்தனர்.

அவவுக்கும் ஒரு கோலும் வரவில்லை. அதையும் மீறி ஒண்டிரண்டு கோல் வந்தாலும் நான் மோலுக்குள்ளை நிக்கிறன் பிறகு கோல் எடுக்கிறன் என வைத்துவிடுவா. ……ஹலோ ஓம் செல்லம்மா தான்…. குளிருக்கு.. 2 நாளா…தொண்டை கட்டிப்போட்டுது. பிறகு எடுக்கிறன் என ரெலிபோன் கட்..பண்ணவும் செல்லம்மாவை முறைத்துப்பார்த்தபடி... உனக்கு தொண்டையிலை….குளிரோ.. ஏன் வாற கோல் எல்லாம் கட்பண்ணுறாள் என உறுமினா ஆட்டிலறி அன்னம்மா …… இல்லை ஒபாமாவின்ரை ஆக்கள் ரெலிபோன் ஒட்டுக்கேக்கினமாம்.




இயற்கையின் சீற்றம்.
உலகம் முழுவதும் இயற்கையின் சீற்றம். அவுஸ்திரேலியா, அமெரிக்காவில் காடுகள் வீடுகள் தீ.



இலங்கை இந்தியா பாகிஸ்தான் சீனா வியட்நாம் பிலிப்பைன்ஸ் உலகில் எங்கு பார்த்தாலும் மழை புயல் வெள்ளம் சூறாவழி. எங்கும் ஒரே பிரச்சினை. யார் யாருக்கு உதவுவது? இத்தாலியில் பல வருடங்களின் பின் எட்னா எரிமலை குழம்பாக ஓடுகிறது. அதுமட்டுமல்ல தினம் தினம் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் குண்டு வெடிப்பு. பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களை வகுப்பில் துப்பாக்கியுடன் சென்று சுட்டுக்கொலை செய்யும் துர்ப்பாக்கிய நிலை. இந்தியாவில் மாணவியர்களுடன் தகாத முறையில் பழகிய மாணவர்களை இடைநிறுத்திய பாடசாலை மைதானத்தில் அதிபர் தாக்கப்பட்டு மரணமானார்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
ஒழுங்காக அமையாத இடத்து வாழ்வு சிறையில் முடிகிறது.



'எப்பொருள் யார்வாய் கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு'



கந்தசஷ்டி விரதக் களையிலும் சீரியல் நாடகத்தையும் விட நகரபிதா றொப் போட்டின் கஞ்சா பிரச்சினை வீட்டுக்கு வீடு சகல மொழிகளிலும் எலியும் கொக்கறோச்சும் நுழையாத வீடுகளுக்கும் பரவிக்கொண்டிருந்தது.

பொலீஸ் திணைக்களமும் விட்டபாடில்லை. ஒன்றையும் (ஒன்றுக்கிருந்ததையும்) விட்டபாடில்லை. புகைப்படங்களும் வீடியோக்களும் எடுத்து பிரசுரித்து ஒளிபரப்பிக்கொண்டிருந்தனர். நகரபிதாவோ பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாதென்பது போல ஒன்றுக்கும் மசியவில்லை. உந்தப்பருப்பு என்னிடம் வேகாதென்ற நிலையில் இருக்கிறார்.

பொது இடங்களில் மலசலம் கழிப்பது மாநகர உப விதிகளின்படி குற்றம். பல முதியவர்கள் சில வேளைகளில் மலசலகூடம் கிடைக்காமல் அவதிப்பட்டு பொது இடங்களை… அசுத்தப்படுத்தியதென குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் மன்னித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிலர் தண்டப்பணம் செலுத்தியுள்ளனர்.

பள்ளி மாணவி நகரபிதாவுக்கு எழுதிய கடிதத்தின் பிரதி, பத்திரிகையில் பிரசுரமானதை ரூபி எல்லோருக்கும் வாசித்துக்காட்டினா.

பாத்தியே அன்னம்மாக்கா அந்தப்பிள்ளை பயப்பிடாமல் எழுதியிருக்கு..உலகர் சொன்னார், நல்ல விசயத்தை எடுத்துச் சொல்ல வயது முக்கியமில்லை. துணிவுதான் முக்கியம்.

திருவள்ளுவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முதலே சொல்லி வைத்தார்.
எப்பொருள் யார்வாய் கேட்பினும் -அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.
உலகர் பிரசங்கம் செய்வது போல தொடர்ந்து சொன்னார்.



யாரும் படித்ததை மறக்கமாட்டார்கள். ஆனால் சிலவேளை ஞாபகம் வருவதில்லை.



முருகன், தந்தை பரமசிவனுக்கே ஓம் எனும் பிரணவ மந்திர விளக்கம் கொடுத்தார்.

இரணியனின் மகன் பக்த பிரகலாதன் தானே கடவுள் என்ற தந்தை இரணியனை வணங்காது மகா விஷ்ணுவை வணங்கினான். ஆணவம் இரணியனை அழிவின் உச்சத்துக்கே கொண்டு சென்றது.



நரசிம்ம அவதாரமெடுத்து அவனை அழித்தார்.
ஆலோசனையும் அறிவுரையும் யாரும் யாருக்கும் சொல்லலாம்.




நவம்பர் மாதம் என்றதும் என்றும் மறக்காத நமக்காக தம்முயிரீந்த மாவீரர்கள் நாள். உலகம் கல்லறையின் கனவுகாணும் மாவீரரைப் போற்றும் நாள். கார்த்திகை இருபத்தியேழு...
சங்கீத பூசணம் திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்களின் பாடல் வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தது.
பாடலின் ஒவ்வொரு வரிகளும் உலகரை எங்கோ கொண்டுபோய் விட்டது.



16. சர்வாலய தீபம் வீடுகளில் தீபம்
ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் மண்டலகால ஆரம்பம்.
ரொறன்ரோ ஐயப்பன் கோவில் மண்டலகால ஆரம்பம்.
17. ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் மண்டல கால ஆரம்பம்.
17. சர்வதேச மாணவர் நாள்.
18. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரப்பிள்ளை நினைவுதினம்
(வெள்ளிப்பனிமலையின் மீதுலாவுவோம்……கப்பல் விடுவோம்)
19. பிரபல நடிகர் எம். என். நம்பியார் நினைவு தினம்.
20. குழந்தைகள் நாள்.
21. உலக தொலைக்காட்சி நாள்.
25. பொ. கைலாசபதி நினைவுதினம்
27. மாவீரர் நாள்.




வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்.
மாபெரும் வீரர் மானம் காத்தோர் மக்கள் மனதில் நிற்கின்றார்.






# கனவுகள்

## 34ஆம் பக்கத்தொடர்ச்சி

என் சிறுவயது கனவு…. பல தடைகளை தாண்டி இன்று நிஜமாகியுள்ளது. என் தகப்பனார் "முடவன் கொம்பு தேனுக்கு ஆசைப்படலாமா"? என்று கேட்ட நேரம் என் இலட்சியத்தின் வீச்சு இன்னும் அதிகமாகியது. அப்போது என் அம்மா "உன்னால் முடியும் என்றும், நானிருக்கிறேன் பயப்படாதே என்று எனக்கு தந்த அந்த தைரியம்" இன்று இந்த முடவன் என் அப்பா சொன்ன, பறிக்க முடியாதளவு உயரத்தில் இருந்த அந்த கொம்புத்தேனை பறித்துள்ளேன். இதற்கு காரணம் என் அம்மா தான். என் கனவுகளை நிஜமாக்கிய அந்த தெய்வத்துக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன். அதேபோல் என் அப்பாவின் அந்த சவால் நிறைந்த வார்த்தையும் எனக்கு இன்னும் என் இலட்சியம் மேல் பற்றை உருவாக்கியது. என் அப்பாவிற்கும் மனமார்ந்த நன்றி. அதைப்போல் 1977 ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தில் நான் இறந்திருக்க வேண்டியவன், அதையும் தாண்டி இன்று நான் டாக்டராக வந்துள்ளேன் என்றால், என் கனவை நிஜமாக்கியவர் நண்பர் பெரேரா தான். இந்த வேளையில் என் நண்பனுக்கு மனமார்ந்த நன்றி. எமது நட்பு தொடரும். இறுதியாக இந்த நாடு இரண்டு மொழிபேசும் மக்களை கொண்டது. இந்த இரண்டு மொழி பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையினை மதிக்கவேண்டியது அரசின் கடமை. அந்த வகையில் இன்னுமொரு 1977ம் ஆண்டு வராமல் தடுப்பது ஆட்சியிலிருக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும். என்னையும் பெரேராவையும் பாருங்கள் நாங்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு சகோதரர்களாக வாழுகின்றோம். இந்தநிலை எங்கும் உருவாகவேண்டும். மனிதம் மதிக்கப்படவேண்டும். ஏன் நான் சிங்களத்திலும், பெரேரா தமிழிலும் பேசினோம் என்றால் நாங்கள் ஒற்றுமையாக வாழ தயாராக உள்ளோம் என்பதை ஆணித்தரமாக உணர்த்தவே என்பதற்காகத்தான். என்னை இந்தக்கருத்தை சொல்ல வைத்ததே என் நண்பன் பெரேரா தான். ஆகவே நாம் ஒற்றுமைக்காக பாடுபடுவோம் என்று கேட்டு எனதுரையினை நிறைவு செய்கிறேன் என்று கூறி மேடையை விட்டு இறங்கிய நண்பனை பெரேரா ஓடிச்சென்று கட்டியணைத்து பாராட்டினான். குரவொலி நிற்க சில மணித்துளிகள் சென்றன. வள்ளியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். வள்ளியின் மனதுள் 'பெற்ற பொழுதினில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்' என்ற வாக்கு ஒலித்துக்கொண்டிருந்தது. செல்லையாவும் தன்னை மறந்து கட்டித்தழுவி பெருமிதம் அடைந்தார். அதேபோல் அம்மாவும் தன் மகனை கட்டியணைத்து பெரிமிதம் கொண்டார்.

பட்டமளிப்பு விழா மகிழ்வுடன் நிறைவுற்றது. மறுநாள் காலை, பெரேராவும், கபிலனும் தங்கள், தங்கள் ஊருக்கு போவதற்கான ஆயத்தங்களை செய்தனர். இரவு புகையிரத்தில் பயணம் செய்வதற்கான ஒழுங்குகள் யாவும் நிறைவுற்றிருந்தது. மாலை வானம் இருண்டு மழை வரும் போல் இருந்தது. இவர்கள் இருவரின் பிரிவு இயற்கைக்கும் தெரிந்து விட்டதோ, அவர்களும் பிரிவு துயர் தாங்காமல் அழுகின்றார்களோ என எண்ணத்தோன்றியது. மழைத்தூறலின் நிழலில் தங்களின் கண்ணீர் துளிகளை மறைத்துக்கொண்டு புகையிரத நிலையம் சென்றனர். பிரிவின் நேரம் வந்தது. நண்பர்கள் தங்களை கட்டி தழுவிக்கொண்டு பெற்றோரிடம் ஆசி பெற்றனர். அந்த பெற்றோரும் மொழி தெரியாவிட்டாலும் சமிக்கை மொழியால் தங்கள் அன்பை பரிமாறிக்கொண்டனர். இரண்டு பக்க துருவத்தை நோக்கி புகையிரதம் புறப்பட்டது. புகையிரதம் தான் அவர்களின் கண்களில் இருந்து மறைந்ததே ஒளிய அவர்களின் எண்ணங்களில் அல்ல.. கபிலன் தாயின் மடியில் குழந்தையைப் போல் படுத்தான் இன்னொரு கனவுடன்.

அந்தக் கனவை வளர்ப்பது போல் வள்ளியும், கபிலனின் தலையை வருடினாள். புகையிரமும் வேகமெடுத்து நகர்ந்தது…..



# BIRCHMOUNT

## GARDENS

## GRAND OPENING WITH BONUS INCENTIVES

### Saturday & Sunday: 11:00am to 5:00pm





**Stylish urban walk-up townhomes at Ellesmere & Birchmount**

## From $299,900




**Sales Office Located At 1483 Birchmount Rd.**
**Monday to Wednesday: 1:00pm to 7:00pm**
**Thursday & Friday: Closed**
**Saturday, Sunday & Holidays: 11:00am to 5:00pm**
**BIRCHMOUNTGARDENS.CA**
**Line 1: 416.901.8988 Line 2: 416.901.6488**
**Fax: 416.901.6188**
















**Free Real Estate Class** - Call: **416.321.6969**







விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
*www.vlambaram.com www.tamilvanakkam.com*




